விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 196 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 18 திங்கட்கிழமை (03.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக மீண்டும் போராட்டம்


(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள காங்கேசன்துறை - திஸ்ஸ விகாரைக்கு எதிரான தொடர் போராட்டம் நேற்று மீண்டும் ஆரம்பமாகியது.

இன்று போயா தினம் என்பதால் குறித்த விகாரையில் வழிபாடுகள் 15



## பிரபாகரனின் மரணம் தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது மைத்திரி



6ஆம் பக்கம் பார்க்க

## 82 கிலோ கஞ்சா மன்னாரில் மீட்பு
### இருவர் கைது

(மன்னார்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பள்ளமடு வீதியில் வைத்து நேற்று முன் தினம் சனிக்கிழமை மாலை 82 கிலோ கேரளா கஞ்சா பொதிகளுடன் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். 15

# தமிழர்கள் இலங்கையின் பூர்வீக குடிகள் அல்லர்

### விகாரைகளின் மீதே சைவ ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன - எல்லாவல மேதானந்த தேரர்



(கொழும்பு)

தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் இலங்கை தமிழர்களின் பண்டைய தாயகமல்ல. அப்படி யாராவது சொன்னால் அவர்களுக்குப் பதிலளிக்க நான் தயார். வடக்குக் கிழக்கில் கட்டப்பட்டுள்ள பழைய கோயில்கள் புராதன விகாரைகளின் மேலேயே கட்டப்பட்டுள்ளன என எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## திடீரென தீப்பற்றி எரிந்த வீடு!
### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் வீதியில் நேற்று வீடொன்று தீப் பிடித்து எரிந்துள்ளது.

வீடு எரிந்து கொண்டிருப்பதை கண்ட அயலவர்களும் பொதுமக்களும் தீயை 15

## ஒரே வாரத்தில் 4 சிசுக்கள் பிரசவத்தின்போது பலி
### கிளிநொச்சி மருத்துவமனையில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடந்த ஒரு வாரத்துக்குள் நான்கு சிசு மரணங்கள் இடம்பெற்றுள்ளதோடு, பிரசவத் தாய் ஒருவரின் கர்ப்பப்பையும் அகற்றப்பட்டுள்ள சம்பவம் பொது மக்களின் மத்தியிலும், சுகாதார ஊழியர்கள் மத்தியிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 15

## யாழ். - இரத்மலானை விமான சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இரத்மலானையிலிருந்து யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கான உள்நாட்டு விமான சேவை நேற்று முன் தினம் 01ஆம் திகதி ஆரம்பமாகியது என இரத்மலானை விமான நிலையத்தின் முகாமையாளர் அருண ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இருந்து ஒரு மணி நேரம் பத்து நிமிடத்தில் யாழ்ப்பாணத்தை அடைய முடியும் எனவும் இந்த விமான சேவை வாரத்தில் சனி, ஞாயிறு, செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய நான்கு நாட்களுக்கு காலை 15

## வரி, ஒதுக்கீட்டு சட்டங்களில் திருத்தம்
### நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்துடன் உள்ளூர் வருமான வரிச் சட்டம் மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டமும் திருத்தப்படும் என எதிர் 15

## சிவபூமி சிறுவர் மனவிருத்தி பாடசாலையின் ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சிவபூமி மன விருத்திப் பாடசாலையின் 20 ஆவது ஆண்டுப் பூர்த்தி விழா இன்று காலை 9.30 மணிக்கு மேற்படி பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தம்பதிகள் பிரதம விருந்தினராகவும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த வைத் 15

## ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கும் பசில்?

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் அமைச்சர் பசில்ராஜபக்ஷவை முன்னிறுத்துமாறு 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

அராலி தெற்கு வட்டுக்கோட்டை எனும் முகவரியை உடைய நாகலிங்கம் பத்மராசா ஆகிய எனது வாகன அனுமதிப்பத்திரம்,வங்கி அட்டை அடங்கிய மண்ணிற பேர்ஸ் ஓட்டு மடம் சந்திக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நல்லுள்ளத்துடன் தந்துதவவும்.

சன்மானம் வழங்கப்படும்

**077 555 8485**

(16170)

# முத்துராஜா யானை தாய்லாந்தை சென்றடைந்தது

(கொழும்பு)

இலங்கையில் இருந்து கொண்டு செல்லப்பட்ட சக் சுரின் எனப்படும் முத்துராஜா யானை, தாய்லாந்தை சென்றடைந்துள்ளது.

குறித்த யானை, ரஷ்யாவுக்கு சொந்தமான இமுசியன் ரக சரக்கு போக்குவரத்து விமானம் ஒன்றில் இலங்கையில் இருந்து நேற்று காலை தாய்லாந்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

அந்தநாட்டு நேரப்படி, மதியம் 12.33க்கு தாய்லாந்தை அடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

தாய்லாந்து அரசாங்கத்தினால், இலங்கைக்கு நல்லெண்ண அடிப்படையில் குறித்த யானை வழங்கப்பட்டிருந்தது.

(4-7)

## புல்லாவெளி
## புனித செபஸ்தியார் ஆலயம்

குருநகர் நிர்வாகம், யாழ்ப்பாணம்.



குருநகர் மக்களால் பாரம்பரியமாக கொண்டாடப்படும் இயக்கச்சி சந்தியில் இருந்து 5 மைல் தொலைவில் உள்ள புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலய திருவிழா பற்றிய விபரம்.

**06.07.2023 மாலை 4.30 மணிக்கு கொடியேற்றமும் திருப்பலியும்.**

**07.07.2023 மாலை 5.00 மணிக்கு திருப்பலி**

**08.07.2023 மாலை 5.00 மணிக்கு நற்கருணை விழா**

**09.07.2023 காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலி யாழ்.மறை மாவட்ட குரு முதல்வரினால் ஒப்புக் கொடுக்கப்படும் என்பதனை அறியத் தருகிறோம்.**

*புனித செபஸ்தியாரின் அருளும் ஆசியும் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்*

இப்படிக்கு
புல்லாவெளி நிர்வாகம்

(16168)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



29.06.2023 அன்று இடம்பெற்ற மக்கள் நலன்பேணும் அமைப்பின் கோண்டாவில் கட்டடத் திறப்பு விழாவில் பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய

**தேசகீர்த்தி கலாநிதி இராசையா குவேந்திரநாதன்**

அவர்களின் சமூக சேவையினைப் பாராட்டி மக்கள் நலன்பேணும் அமைப்பினால்

**"கொடை வாரிதி"**

எனும் கௌரவப் பட்டம் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் ஜனாதிபதி


**மாண்புமிகு. மைத்திரிபால சிறிசேன**

அவர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டமையைப் பாராட்டுவதோடு அவர்களின் சமூக சேவை மென்மேலும் தொடர நாமும் அவர்களை மனதாரப் பாராட்டுகின்றோம்.

**உரிமையாளரும் ஊழியர்களும்**
**சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்**
**41, பெரியகடை, யாழ்ப்பாணம்.**

(16147)

# மரண அறிவித்தல்



பிறப்பு **19.03.1935**

இறப்பு **02.07.2023**

(C-6858)

## திருமதி கதிரவேலு கமலாவதி

திருவத்தம்பை ஊரிக்காட்டைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கதிரவேலு கமலாவதி அவர்கள் 02.07.2023 நேற்று ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. கதிரவேலு (இளைப்பாறிய அதிபர்-யா/கம்பர்மலை வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிந்தாமணி - காந்தியம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற தம்பு - பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும் தர்மராசா, செல்வகுமார் (ஆசிரியர்- கொழும்பு), உதயகுமார் (ஜேர்மனி), இந்திரா(வீணை ஆசிரியர் - கொழும்பு), தேவகுமாரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் லீலாவதி, சித்ரா(கொழும்பு), ஸ்ரீவசந்தாமணி(ஜேர்மனி), குமாரசிவம்(உதவிக் கணக்காளர் - கொழும்பு), கலைவாணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சிந்தியா, இந்துப்பிரியா, ரம்மியா, அருண், கல்யாணி, கலைமகள், செந்தில்குமரன், ஐங்கரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தேவராசா, சின்னக்கிளி, காலஞ்சென்ற சரஸ்வதி காலஞ்சென்ற தியாகராசா, தங்கராசா, விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தெய்வானைக்கண்டு, லட்சுமிப்பிள்ளை, தையல்நாயகி, ஆறுமுகம் சரஸ்வதி மற்றும் பூரணம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 03.07.2023 இன்று திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10 மணிக்கு மயிலியதனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**திருவத்தம்பை, ஊரிக்காடு.**

*தகவல்:*
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**பெறாமக்கள்**
**(சிவகுமார், சந்திரகுமார், சசிகுமார்)**

**தொடர்புகளுக்கு:**
**077 056 2311 (செல்வகுமார்)**
**004917696726190 (உதயகுமார்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுச் சிறப்புமிக்க நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவ தேர்த் திருவிழா












(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்.நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ தேர்த் திருவிழா நேற்று பக்திபூர்வமாக நடைபெற்றது.

நயினை நாகபூசணி அம்மனுக்கும் விநாயகர், முருகன், வள்ளி, தெய்வானை ஆகிய தெய்வங்களுக்கும் விசேட அபிஷேக ஆராதனைகள் என்பன இடம்பெற்று மங்கள வாத்தியங்கள் முழங்க விநாயகப்பெருமான், முருகப்பெருமான்- வள்ளி- தெய்வானை சமேதராயும் நயினை நாகபூசணி அம்மன் ஆகிய தெய்வங்கள் தனித்தனியே மூன்று தேர்களில் ஏறி வெளிவீதி வலம் வந்தனர்.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வந்த பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு நயினை நாகபூசணி அம்மனின் அருட்கடாட்சத்தினை பெற்றுச் சென்றனர். (நி-6-33)

# பச்சை குத்துபவர்களுக்கு எயிட்ஸ் நோய் ஏற்படும் அபாயம்

## தேசிய குருதி மாற்று மத்திய நிலையம் எச்சரிக்கை

(கொழும்பு)

**பச்சை குத்துதல் மற்றும், ஊசி ஏற்றல் முதலான செயற்பாடுகள் மூலம், எயிட்ஸ் உள்ளிட்ட 5 நோய்கள் ஏற்படக்கூடிய அபாயம் நிலவுவதாக தேசிய குருதி மாற்று மத்திய நிலையத்தின் பணிப்பாளர் மருத்துவர் லக்ஸ்மன் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.**

அத்துடன் பச்சை குத்திய காலத்தில் இருந்து, ஒரு வருட காலத்திற்கு குறித்த நபர்களிடம் இருந்து குருதி பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது எனவும் தேசிய குருதி மாற்று மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (நி)



# இலங்கை-இந்திய பயணிகள் கப்பல் சேவை மேலும் தாமதமாகும் என தகவல்



(சென்னை)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை மேலும் தாமதமாகும் என இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

முன்னதாக, புதுச்சேரியின் காரைக்கால் மற்றும் யாழ். காங்கேசன்துறை துறைமுகங்களுக்கு இடையேயான பயணிகள் கப்பல் சேவை ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் படகு சேவைக்காக தேர்வு செய்யப்பட்ட துறைமுகம் மாற்றப்பட்டதால், இந்த பயணிகள் கப்பல் சேவை தாமதமாகி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பயணிகள் கப்பல் சேவைக்காக, தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் துறைமுகத்தில் வசதிகளை அதிகரிக்க இந்தியா மேலும் கால அவகாசத்தை கோரியுள்ளது.

இந்நிலையில் குறித்த சேவையில் தாமதம் ஏற்படலாம் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை மேற்கோள்காட்டி இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் பெருஞ்சமர் போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி அணி அபார வெற்றி



யாழ்.இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் இடையில் கொழும்பு சரவணமுத்து ஓவல் சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்ற 12 ஆவது இந்துக்களின் பெருஞ்சமர் கிரிக்கெட் போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி 9 விக்கெட்டுகளால் அமோக வெற்றியீட்டியது.

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான அப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்ப வீரர் கே.பரஷித் 147 பந்துகளை எதிர்கொண்டு 12 பவுண்டறிகள், ஒரு சிக்ஸ°டன் 80 ஓட்டங்களைப் பெற்றார்.

3 ஆவது விக்கெட்டில் எல். பிரியந்தனுடன் 55 ஓட் டங்களைப் பகிர்ந்த பரஷித், 5 ஆவது விக்கெட்டில் எம். கஜனுடன் 44 ஓட்டங்களைப் பகிர்ந்தார்.

பரஷித்தை விட துடுப்பாட்டத்தில் எம்.கஜன் (28), எஸ்.சுபர்ணன் (23), எல். பிரியந்தன் (19), ரீ. ப்ரேமிகன் (13) ஆகியோர் இரட்டை இலக்க எண்ணிக்கைகளைப் பெற்றனர்.

கொழும்பு இந்து பந்துவீச்சில் ஆர்.தேஸ்கார் 36 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் எம்.அபிஷேக் 57 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்துக் கல்லூரி அதன் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும்இழந்து 49 ஓட்டங்களை மாத்திரம்பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஆ.டிரோஜன் (17), பி.தாருஜன் (15) ஆகிய இருவரே இரட்டை இலக்கை எண்ணிக்கைகளைப் பெற்றனர்.

யாழ்.இந்து பந்துவீச்சில் ரி.கஜநாத் 4 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 11 ஓவர்களில் 22 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் கே.தரணிசன் 3 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் எஸ்.பரத்வாசன் 5 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பலோன் ஒன் முறையில் 2 ஆவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட நிர்ப்பந்திக்கப்பட்ட கொழும்பு இந்து. முதலாம் நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட்டு இழப்பின்றி 41 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று முன்தினம் சனிக் கிழமை தொடர்ந்த போது யாழ்.இந்து நிதானத்துடன் துடுப்பெடுத்தாடியது. ஆரம்ப வீரர் ஆர். டிலுக்ஷன் 3 மணி நேரம் துடுப்பெடுத்தாடி 165 பந்துகளை எதிர்கொண்டு 72 ஓட்டங்களைப் பெற்று 3 ஆவதாக ஆட்டம் இழந்தார்.

ஆரம்ப விக்கெட்டில் டி.மிதுசிகனுடன் 59 ஓட்டங்களைப் பகிர்ந்த டிலுக்ஷன் இரண்டாவது விக்கெட்டில் தரிஜனுடன் 30 ஓட்டங்களையும் 3ஆவது விக்கெட்டில் என். நிருபனுடன் 39 ஓட்டங்களையும் பகிர்ந்தனர்.

37 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு 2 ஆவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்து ஒரு விக்கெட்டை இழந்து 38 ஓட்டங்களைப் பெற்று வெற்றீயிட்டியது. எஸ்.அர்ஜன் 21 ஓட்டங்களுடனும் ரீ.பிரேமிகன் 7 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காதிருந்தனர். முதலாவது இன்னிங்ஸில் அரைச் சதம் குவித்த ஹீரோ பரஷித் 9 ஓட்டங்களை மாத்திரம் பெற்றார்.

ஆட்டநாயகன் -கே. பரஷித் (80 ஓட்டங்கள் - யாழ். இந்து). சிறந்த துடுப்பாட்ட வீரர்- ஆர். டிலுக்ஷன் (72 - ஓட்டங்கள் கொழும்பு இந்து). சிறந்த பந்துவீச்சாளர்- ரீ.கஜநாத் (11 விக்கெட்டுகள் - யாழ். இந்து). சிறந்த களத்தடுப்பாளர் ரீ.பிரேமிகன் (யாழ். இந்து) ஆகியோருக்கு வழங்கப்பட்ட போதும் இந்த வெற்றியுடன் இந்துக்களின் பெருஞ் சமரில் 4 ஆவது வெற்றியை பதிவு செய்தது யாழ். இந்துக் கல்லூரி.(6).


## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச சபை முன்னாள்
உறுப்பினர் இணுவையூர்
**வி. கே. குகானந்தன்** அவர்களுடைய
மனைவியின் பாசமிகு தந்தை

**திரு. செல்லத்துரை செல்வம்**

அவர்களின் பிரிவால் துயரத்தில்
இருக்கும் குடும்பத்தினருக்கு
எங்களுடைய ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

முன்னாள் கௌரவ தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள்
நல்லூர் பிரதேச சபை (16179)



### பெண் விற்பனையாளர் தேவை

எமது புடைவை கடைக்கு
புடைவை வியாபாரம்
செய்யக்கூடிய பெண்
பணியாளர் தேவை.

**சிவகணேசன் TEX**
41, பெரியகடை, யாழ்ப்பாணம். (16178)


## மரண அறிவித்தல்



பிறப்பு
03 - 02 - 1950

இறப்பு
30 - 06 - 2023

### திரு. குமாரு குணரட்ணம்

நல்லூர், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட கு.குணரட்ணம் 30.06.2023 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி குமாரு - சின்னப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற பராசக்தி, புவனேஸ்வரி, சீவரெட்ணம் மற்றும் இராஜேஸ்வரி, சிவராசா, இராசரெட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கெங்காதேவியின் அன்புக் கணவரும் அரவிந்தன், பார்த்தீபன், பிரதீபன், பிரியா ஆகியோரின் அன்புத் தந்தையும் நிரோஜா, கஜேந்தினி ஆகியோரின் மாமனாரும் லியனா, ஆதித்தியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04.07.2023 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் (4 ஆம் ஒழுங்கை, அரசடி வீதி) நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

149/3, 4 ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி, கந்தர்மடம்,
நல்லூர். (16174)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### கந்தசாமி இளங்கோவன்

(ஓய்வுபெற்ற தீவுப்பகுதி பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளர்,
முன்னாள் யாழ்.மத்தியஸ்தர் சபை மத்தியஸ்தர்,
தலைவர் - சிற்பனை முருகன் ஆலய பரிபாலன சபை)



வேலணை மேற்கு, சிற்பனையடியை பிறப்பிடமாகவும் இல.131/1, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் தற்போது இல.639/1, நாவலர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி இளங்கோவன் அவர்கள் 02.07.2023 ஞாயிற்றுக் கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நமசிவாயம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சறோஜினிதேவியின் (ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதியும் சிரேஷ்ட சட்டத்தரணியும்) பாசமிகு கணவரும் அன்னலட்சுமியின் சகோதரனும் இலங்கைநாதன் (முன்னாள் அன்னராஜா ஸ்ரோர்ஸ் - யாழ்ப்பாணம்), குருசாமி (ஓய்வுபெற்ற தொழில் நீதிமன்றத் தலைவர்), திலகவதி, யோகபதி, பூபாலபிள்ளை Dr.சிவபாலன் ஆகியோரின் மைத்துனரும் ஜனனி, கௌதமன் (சட்டக் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விசாகன் (HNB அச்சுவேலிக் கிளை) அகிலா (MLT - Northern Central Hospital) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.07.2023) திங்கட்கிழமையன்று பி.ப 2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
கௌதமன் (மகன்) - 076 928 3034
விசாகன் (மருமகன்) - 077 932 7235
இல.639/1, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (16177)

தகவல்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகக்கட்டுப்பாட்டை இழந்த கார் மரத்துடன் மோதி விபத்து

## ஒருவர் பலி மூவர் படுகாயம்




(பதுளை)

பதுளை - பண்டாரவளை வீதியில் நேற்று காலையில் இடம்பெற்ற கோர விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் மூவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இரண்டு பெண்களும் ஒரு குழந்தையும் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. காரில் பயணித்த குடும்பம் ஒன்றே இந்த விபத்துக்கு முகங்கொடுத்துள்ளனர்.

வேக கட்டுப்பாட்டை இழந்த கார் வீதி அருகில் இருந்த மரமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவத்தில் எல்ல பகுதியைச் சேர்ந்த 51 வயதான வாகன சாரதியே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# கால்வாயில் பாய்ந்து விளையாடிய இரு சிறுவர்கள் உயிரிழப்பு

(கொழும்பு)

ஸ்ரீபுர திஸ்ஸபுர பகுதியில் கால்வாயில் பாய்ந்து விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் இருவர் மரணமடைந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஸ்ரீபுர திஸ்ஸபுர பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கால்வாய்க்கு அருகில் இருந்த மரமொன்றில் ஏறி கால்வாய்க்குள் குதித்து விளையாடிக்கொண்டிருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் அதே பிரதேசத்தைச் சேர்ந்த 12 மற்றும் 15 வயதுகளையுடைய சிறுவர்கள் இருவரே மரணமடைந்துள்ளனர்.

மரத்திலிருந்து அவ்விருவரும் ஒரே நேரத்தில் பாய்ந்த போது இருவரின் தலைகளும் மோதியதில் கால்வாய்க்குள் விழுந்து மீண்டெழ முடியாத நிலையில் அவ்விருவரும் மரணமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# கூட்டுறவுத் திட்டத்தில் இருந்து விலகுவதற்கு தயாராகும் அரசு

## அமைச்சர் நளின் தெரிவிப்பு

(கொழும்பு)

கூட்டுறவுத் திட்டத்தில் இருந்து விலகுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தலையீட்டினால் கூட்டுறவு வர்த்தகம் பாதிக்கப்படுமாயின் அரசாங்கம் தலையீட்டிலிருந்து விலகிக்கொள்ள வேண்டுமென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவிடமிருந்து அரசாங்கம் எவ்வாறு வெளியேறுவது என்பது பற்றி நாங்கள் இப்போது சிந்திக்கிறோம். கூட்டுறவு ஒரு பெரிய நிறுவன கட்டமைப்பில் செயற்படும் திறனைக் கொண்டுள்ளது.

கூட்டுறவுத் தொழிலில் அரசு தலையிட்டால் கூட்டுறவுத் தொழிலில் அரசு இருப்பதில் எந்தப் பயனும் இல்லை என்பதை அனைவரும் ஒப்புக்கொள்கிறோம்.

எமக்கு தேவையான தலையீட்டை நாங்கள் முன்மொழிந்தால், அந்தத் தலையீடு கூட்டுறவு வணிகங்கள் மூலம் எப்படி நடக்க வேண்டும் என்பதை நாங்கள் முன்மொழிந்தால் இந்த திட்டத்தை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும் என்பது எனது புரிதல் என அவர் தெரிவித்தார். (நி)

# 2 கோடி பெறுமதியான பீடி இலைகள் மீட்பு



(புத்தளம்)

புத்தளம் வண்ணாத்தவில்லு - கரைத்தீவு பகுதியில் மீன்பிடி படகு ஒன்றின் மூலம் கடத்திச் செல்லப்பட்ட சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான பீடி இலைகள் நேற்று காலை கைப்பற்றப்பட்டதுடன், இது தொடர்பில் விஜய கடற்படை முகாம் வீரர்களால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

1,947 கிலோ பீடி இலைகள் கொண்ட 65 பொதிகளுடன் வண்ணாத்தவில்லு கரைத்தீவு பகுதியில் வசிக்கும் 50 வயதுடைய நபரே சந்தேகத்தில் கைது செய்யப்பட்டதுடன், பீடி இலைகளை கடத்தப் பயன்படுத்தப்பட்ட மீன் பிடி படகொன்றையும் கடற்படையினர் கைப்பற்றினர்.

இந்த பீடி இலைகள் சட்ட விரோதமான முறையில் இந்தியாவிலிருந்து கடல்மார்க்கமாக கொண்டுவரப்பட்ட போதே கைப்பற்றப்பட்டுள்ளது. (நி)

# கைப்பற்றப்படும் வாகனங்கள் இனி முப்படையினர் வசம்

(கொழும்பு)

சுங்கத்தினரால் கைப்பற்றப்படும் மற்றும் சட்ட விரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட (அசெம்பிள்) வாகனங்களை சுங்கத்தினரிடம் ஒப்படைப்பதற்கு பதிலாக, அவற்றை பறிமுதல் செய்து பொலிஸ் மற்றும் பாதுகாப்பு பிரிவுச் சேவைக்கு வழங்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இதற்காக புதிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அதற்கு ஏற்ற வகையில் பொலிஸ் சட்ட திணைக்களம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சட்ட விரோதமாக தயாரிக்கப்பட்ட வாகனங்கள் கைப்பற்றப்பட்ட பின்னர், அவை அரச பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்டு, அது சட்ட விரோத வாகனம் என்று நிரூபிக்கப்பட்டால், சுங்கத்தின் பொறுப்பில் வைக்கப்படும். இனிமேல் இந்த நடைமுறையின்றி, பறிமுதல் செய்யப்படும் வாகனங்களை பொலிஸார் மற்றும் பாதுகாப்பு படையினரின் பயன்பாட்டுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (நி)

# இராசிபலன்

03.07.2023
ஆனி 18, திங்கட்கிழமை
பூரணை பிற்பகல் 5.52 மணிவரை
மூலம் முற்பகல் 11.44 மணிவரை

சுபநேரம் - 11.57-1.27 மணிவரை
இராகுகாலம் - 7.27-8.57 மணிவரை
பூரணை விரதம்

சந்திராஷ்டமம் - கார்த்திகை ரோகிணி.

வளவன்

**மேஷம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணுவீர்கள், தொழில் ரீதியாக ஏற்பட்ட போட்டிகளை சமாளிப்பீர்கள், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள்.

**கடகம்:** மறைமுக எதிர்ப்புகள் மாறும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**துலாம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**மகரம்:** பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், தொழில் ரீதியாக பயணங்கள் இடம்பெறலாம்.

**ரிஷபம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பிரயாண பயமுண்டு, எடுத்த காரியங்களில் தாமதங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**விருச்சிகம்:** குடும்ப மகிழ்ச்சி கூடும், உறவினர்கள் சந்திப்பு இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**கும்பம்:** தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், உன்னதமான வாழ்க்கைக்கு அடித்தளம் அமைக்கும் நாள், பண வரவால் சந்தோசம் அடைவீர்கள், பொதுவாழ்வில் புகழ் கூடும்.

**மிதுனம்:** பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கன்னி:** தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, இரவு - பகல் பாராது பாடுபடுவீர்கள், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**மீனம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

எப்படி உடற்பயிற்சி உடம்புக்குத் தேவையோ அப்படியே படிப்பும் மனதிற்குத் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரபாகரனின் மரணம் தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாதாம்

## யாழில் மைத்திரி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மரணம், மரபணு பரிசோதனை தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாது என்றும் தான் இறுதியுத்த காலத்தில் சில வாரம் தான் பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்நல்லூரில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது ஊடகவியலாளரொருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மரபணு பரிசோதனை தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாது.

நான் இறுதியுத்த காலத்தில் இரண்டு வாரங்களுக்கு பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தேன்.

பிரபாகரன் கொல்லப்பட்டாரா என்பது எனக்கு தெரியாது. அது மேல்மட்டத்தை சேர்ந்தவர்களுக்கே தெரியும். அவர்களே அதை கட்டுப்படுத்தினர் எனத் தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் யாழ்.கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் சஜின் டி வாஸ் குணவர்தன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் பேராசிரியர் சமில லியனகே, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொருளாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாரதி துஷ்மந்த மித்ரபால, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொலநறுவை மேற்கு அமைப்பாளர் தஹாம் சிறிசேன உள்ளிட்டோர் உடனிருந்தனர். (நி-6-33)

# வெங்காய அறுவடைக்கான இயந்திரத்தை அறிமுகம் செய்து வைத்தார் மைத்திரி

(சாவகச்சேரி)



உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குப்பிழான் கிராமத்தில் வெங்காயச் செய்கை மேற்கொள்வதற்கு தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய நவீன இயந்திரங்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டு வெங்காயத்தை நாட்டுவதற்கான இயந்திரம் மற்றும் அறுவடை செய்த வெங்காயத்தை தூய்மைப்படுத்துவதற்கான இயந்திரம் ஆகியவற்றை இயக்கி அவற்றை அறிமுகம் செய்து வைத்திருந்தார்.

அத்துடன் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இயந்திரங்களை உருவாக்கியவர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால கருத்துத் தெரிவிக்கையில்,

நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி நாம் முன்னேற வேண்டும். அதுவே நாட்டின் வளர்ச்சிக்கு தேவை. ஆக்கத்திறன் கொண்ட இளைஞர்கள் தமது திறமைகள் ஊடாக நாட்டை முன்னேற்ற வேண்டும்.

ஆனால் இன்றைய இளைஞர்களோ வெகுவாக நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

மேற்படி நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், முன்னாள் பிரதி அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாரதி துஷ்மந்த மித்ரபால, கட்சியின் மத்திய குழு உறுப்பினர் பேராசிரியர் சமில லியனகே, மைத்திரிபால சிறிசேனவின் புதல்வர் தஹாம் சிறிசேன, விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (நி-6-30)

# மாணவிகளுடன் சேட்டையில் ஈடுபட்டவர்களை தட்டிக்கேட்க சென்ற மாணவன் மீது தாக்குதல்

(கரணவாய்)

கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவிகளுடன் சேட்டை விட்டவர்களை தட்டிக் கேட்ட மாணவன் ஒருவர் மீது சிவில் உடையில் இருந்த பிறிதொரு பாடசாலை மாணவனினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு படுகாயமடைந்த மாணவன் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன.

போட்டிகள் நிறைவுற்றதும் கலந்து கொண்ட மாணவ, மாணவிகள் வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை மாணவிகளுடன் சிலர் சேட்டையில் ஈடுபட்டுள்ளனர். அதனைத் தடுக்க முற்பட்ட 16 வயதுடைய ஜெயக்குமார் கௌதமன் என்ற மாணவன் மீது போத்தலினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் படுகாயமடைந்த மாணவன் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை தாக்குதல் மேற்கொண்ட மாணவனும் தனக்குத் தானே போத்தலால் வெட்டிய நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-6-60)

# சிறுவர்களுக்கான பயிற்சிப் பாசறை

(சாவகச்சேரி)

ஒன்றுகூடுவோம் இலங்கை அமைப்பின் ஏற்பாட்டில் சிறுவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிப் பாசறை இன்று திங்கட்கிழமை கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி பயிற்சிப் பாசறை நிகழ்வு காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை ஏ9வீதி கனகாம்பிகைக்குளம் கிளிநொச்சி என்ற முகவரியில் அமைந்துள்ள ஒன்றுகூடுவோம் இலங்கை அமைப்பின் வடமாகாண நிலையத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-30)





யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் தேர்த் திருவிழா நேற்றுக்காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்:-சிவசாந்தன்)



கிளிநொச்சியில் அமைந்துள்ள அரச கரும மொழிகள் திணைக்களத்தில் அரச கருமமொழிகள் வாரம் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரை நாடுமுழுவதும் கொண்டாடப்பட்டுவரும் நிலையில் நேற்று முன்தினம் சிங்கள கற்க நெறியை முடித்த 82 அரச திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் கற்கை நெறியினை நிறைவுசெய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. (படம்- தேவானந்தன்)

## பொன்னாலை ஸ்ரீ வரதராஜ பெருமாள் ஆலய மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய மஹாகும்பாபிஷேகப் பெருவிழாவினை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிமுதல் 6 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும்.

7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.45 மணி முதல் முற்பகல் 10.15 வரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (நி-6)

# வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு சீல் வைப்பு

(கரணவாய்)

நெல்லியடி கொடிகாமம் வீதியில் இயங்கி வந்த வாகன சுத்திகரிப்பு நிலையத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வரை மூடுமாறு பருத்தித்துறை நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்டுள்ளது.

கரவெட்டி பிரதேச சபையால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோதே மேற்படி கட்டளையை நீதிமன்றம் உத்தரவிட்டது.

குறித்த நிலையத்தில் வாகனங்களை சுத்திகரிக்கும் போது ஒயில் கலத்தல், வாகனத்தை சுத்திகரிக்கும் நீர் வடிகட்டும் செயற்பாடுகளும் செய்யப்படாமையால் சூழலைமாசுபடுத்தும் செயற்பாடு என இனங்காணப்பட்டமையால் குறித்த வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு சீல் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடிக்கு கடிதம் அனுப்ப தயாராகும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதை வலியுறுத்தி இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடிதமொன்றை இவ்வார இறுதிக்குள் அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளது.

இக்கடிதத்தினை ஏனைய தரப்புக்களான இலங்கை தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி உள்ளிட்ட தரப்புக்களுடனும் கூட்டிணைந்து அனுப்புவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பௌத்த மதத்தின் பெயராலும் தொல்பொருளின் பெயராலும் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பொது மக்களுக்குச் சொந்தமான காணிகள் மற்றும் ஏனைய வரலாற்றுப் பகுதிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றமையும் இதன் போது சுட்டிக்காட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது குறித்த கடிதத்துக்கான வரைவு, பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாரத்துக்குள் அது இறுதி செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில் புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப்., ஜனநாயக போராளிகள், தமிழ்த் தேசியக் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகள் கையொப்பங்களை இடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# யாழிலிருந்து கதிர்காமம் சென்ற பேருந்து விபத்திற்குள்ளானது

## நடத்துநர் மருத்துவமனையில்

(கதிர்காமம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து கதிர்காமம் நோக்கிச் சென்ற தனியார் பேருந்து விபத்துக்குள்ளாகி உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை மொரவ பகுதியில் நேற்று அதிகாலை 2 மணியளவில் விபத்து ஏற்பட்டுள்ளது.

சாரதியின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த விபத்தில் பேருந்தின் நடத்துநர் படுகாயமடைந்து மருத்துவமனையில் உள்ளதாக தெரியவருகிறது.

பேருந்தில் பயணித்த இளைஞரொருவர் படுகாயம் அடைந்த நிலையில் அவருடைய இரு கால்களும் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இவ்வாறு படுகாயமடைந்தவர் யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த பத்மநாதன் பரதன் (33வயது) என்பவரே படுகாயம் அடைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது. (நி)

## மின்கட்டண குறைப்பிற்கு ஏற்ப

# பேக்கரி பண்டங்களின் விலை குறைக்கப்பட வேண்டும்

## தேசிய இயக்கம் வலியுறுத்தல்

(கொழும்பு)

நடைமுறையில் உள்ள மின் கட்டண குறைப்புக்கு ஏற்ப பேக்கரி உற்பத்திகளின் விலைகள் குறைக்கப்பட வேண்டும் என நுகர்வோர் உரிமைகளை பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

எரிவாயு விலைகள் குறைக்கப்படும் போது பேக்கரி உரிமையாளர்கள் மற்றும் உரிமையாளர் சங்கங்கள் தமது வெதுப்பகங்கள் மின்சாரத்தின் மூலம் இயங்குவதாகக் கூறுகின்றனர்.

அதன் காரணமாக பேக்கரி உற்பத்திகளின் விலைகளை குறைக்க முடியாது என அந்த சந்தர்ப்பங்களில் தெரிவித்தனர்.

இருப்பினும் தற்போது அதற்கான சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. மின் கட்டணம் குறைக்கப்பட்டுள்ள நிலையில் பேக்கரி உற்பத்திகள் மற்றும் சிற்றுண்டிசாலை உணவகங்களின் விலைகள் குறைக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# பயணச்சீட்டின்றி பயணிகள்; சுற்றி வளைக்கப்படும் தொடரூந்துகள்

(கொழும்பு)

இலங்கையில் தினமும் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட பயணிகள் தொடரூந்தில் பயணச்சீட்டு எடுக்காமல் பயணிப்பதாக தெரியவந்துள்ளது.

இதனால், நாள் ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் நட்டத்தை தொடரூந்து திணைக்களம் சுமக்க வேண்டியுள்ளதென குறிப்பிடப்படுகின்றது.

இதன் காரணமாக தொடரூந்து பயணச்சீட்டு சோதனை பரவலாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தொடரூந்து பொது மேலாளர் தெரிவித்துள்ளார்.

அலுவலக தொடரூந்துகளில் பெரும்பாலானோர் பயணச்சீட்டு இன்றி பயணம் செய்வதை அவதானித்துள்ளதாக பொது மேலாளர் குறிப்பிட்டுள்ளார்.

தொடரூந்து பயணச்சீட்டு இல்லாமல் பயணித்தவர்களைத் தேடி கடந்த வாரம் நடத்தப்பட்ட சோதனையில் ஆயிரக்கணக்கானோர் சிக்கியுள்ளனர்.

அவ்வாறு சிக்கியவர்களிடம் 3000 ரூபாய் அபராதத்துடன் இரண்டு மடங்கு பயணக் கட்டணத்தை அறவிட்டதாக அவர் தெரிவித்தார்.

நாளொன்றுக்கு சுமார் நான்கு இலட்சம் பேர் தொடரூந்து பயன்படுத்துவதாகவும் தொடரூந்து திணைக்களத்திற்கு மாதாந்தம் ஆயிரம் கோடி ரூபா வருமானம் கிடைத்தாலும், மொத்த வருமானமும் எரிபொருள் செலவிற்கு மட்டுமே செலவிட வேண்டியுள்ளது.

அதற்கமைய, பேருந்து கட்டணத்தை விட 75 சதவீதத்தால் தொடரூந்து பயணச்சீட்டு கட்டணத்தை அதிகரிக்க யோசனை முன்மொழியப்பட்டுள்ளதாக தொடரூந்து திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (நி)

# அரசாங்கத்தின் அடுத்த மோசடிக்கு அனுமதி வழங்கிய பாராளுமன்றம்

## உதயகம்மன்பில சாடல்

(கொழும்பு)

அரசாங்கத்தின் பிறிதொரு மோசடிக்கு பாராளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

தேசிய கடன் மறுசீரமைப்பு செயற்றிட்டம் தொடர்பில் சட்டமா அதிபர் திணைசேரிக்கு முன்வைத்த பரிந்துரைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

கடன் மறுசீரமைப்பு தொடர்பான சகல அதிகாரங்களும் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளன என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

தேசிய கடன் மறுசீரமைப்பு தீர்மானத்துக்கு தாம் ஏன் வாக்களித்தோம் என்பதை பொதுஜன பெரமுனவின் பெரும் பாலான உறுப்பினர்கள் அறியாமல் உள்ளார்கள். பாராளுமன்ற பதவியை தக்க வைத்துக்கொள்வதற்காக ஜனாதிபதியின் கட்டளைகளுக்கு அமைய செயற்படுகிறார்கள்.

தேசிய கடன் மறுசீரமைப்புக்கான தீர்மானங்கள் எடுக்கும் சகல அதிகாரங்களும் ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

தேசிய கடன் எந்த வகையில் மறுசீரமைக்கப்படும் என்பது தொடர்பான திட்டம் அமைச்சரவை கொள்கை பத்திரத்தில் தெளிவாக உள்ளடக்கப்பட வேண்டும் என சட்டமா அதிபர் கடந்த மாதம் 27 ஆம் திகதி திறைசேரியின் செயலாளரிடம் உத்தியோகபூர்வமாக வலியுறுத்தியுள்ளார்.

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சட்டமா அதிபர் வழங்கிய ஆலோசனைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.


ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பாதுகாப்பு



தொடர்பில் எவ்வித சட்ட உத்தரவாதமும் வழங்கப்படவில்லை. எதிர்வரும் காலங்களில் ஆட்சிக்கு வரும் அரசாங்கம் இந்த பிரச்சினைக்கு முகங்கொடுக்க நேரிடும்.

அரசாங்கத்தின் பிறிதொரு மோசடிக்கு அமைச்சரவை ஊடாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தேசிய வளங்களை பாதுகாக்கும் பொதுஜன பெரமுனவின் கொள்கையை ஜனாதிபதி இல்லா தொழிக்கிறார்.

நாட்டு மக்களின் கடும் எதிர்ப்பு எதிர்வரும் காலங்களில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என அவர் தெரிவித்தார். (நி)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 250 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 220 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 800 | 800 | 600 | 1000 |
| தக்காளி | 450 | 400 | 300 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 240 | 250 | 300 |
| கோவா | 300 | 300 | 300 | 300 |
| கரட் | 360 | 500 | 450 | 550 |
| பூசணி | 140 | 120 | 100 | 120 |
| புடோல் | 200 | 180 | 200 | 300 |
| வாழைக்காய் | 150 | 180 | 140 | 160 |
| சின்ன வெங்காயம் | 380 | 340 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 140 | 130 | 140 | 140 |
| பாகற்காய் | 600 | 600 | 500 | 600 |
| வெண்டக்காய் | 280 | 250 | 150 | 320 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 180 | 240 |
| பயற்றங்காய் | 400 | 700 | 500 | 300 |
| லீக்ஸ் | 320 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 420 | 300 | 350 | 450 |
| கறிமிளகாய் | 350 | 350 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 600 | 800 |
| போஞ்சி | 520 | 450 | 550 | 500 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 160 | 280 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 100 | 100 |
| தேசிக்காய் | 350 | 200 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 90 | 100 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 400 | 800 |
| முள்ளங்கி | 180 | 180 | 180 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 50 | 35 | 50 | 60 |
| ஈரப்பலா | 180 | 200 | 200 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 157

### நேர்மையான செயல்

ஒரு நகை வியாபாரியின் மறைவுக்குப் பிறகு, அவரது குடும்பம் மிகவும் மோசமான துன்பத்திற்கு உள்ளானது.

சாப்பிடுவதற்கும் கூட போதுமான அளவுக்கு பணம் இல்லாத நிலைமையை அடைந்து விட்டார்கள்.

ஒரு நாள் அந்த நகை வியாபாரியின் மனைவி தன் மகனை அழைத்து, ஒரு நீலக் கல் பதித்த நெக்லஸை அவனது கையில், கொடுத்துக் கூறினாள்.

மகனே, இதை எடுத்துக் கொண்டு, உன் மாமாவின் கடைக்குச் செல். அவரிடம் இதை விற்று நமக்குக் கொஞ்சம் பணம் தரும்படி கேள் என்றாள்.

மகன் அந்த நெக்லஸை எடுத்துக் கொண்டு, அவனது மாமாவின் கடையை அடைந்தான். அவனது மாமா அந்த நெக்லஸை முற்றிலுமாகப் பார்த்தார்.

அவனிடம் கூறினார். என் அன்பு மருமகனே, உன் அம்மாவிடம் கூறு! அதாவது இப்போது மார்க்கெட் மிகவும் மோசமாக இருக்கிறது. கொஞ்சநாள் கழித்து இதை விற்றால், அவளுக்கு நல்ல விலை கிடைக்கும் என்று..

பின் குடும்பச் செலவுக்காக அவர், அவனிடம் கொஞ்சம் பணத்தைக் கொடுத்தார்.

மேலும் நாளை முதல் கடைக்கு வந்து என்னுடன் உட்கார்ந்து வேலையை கற்றுக்கொள் என்றார்.

எனவே, அடுத்த நாள் முதல், அந்தப் பையனும் தினமும் கடைக்குப் போகத் தொடங்கினான். அங்கே கற்றுக் கொள்ளத் தொடங்கினான்.

எப்படி வைரம் மற்றும் கற்களை பரிசோதிக்க வேண்டும் என்பதையும் தெரிந்து கொண்டான்.

விரைவிலேயே, அவன் வைரத்தைப் பற்றி பகுத்தாய்வு செய்து கூறுவதில் ஒரு வல்லுநராக மாறினான்.

நெடுந்தொலைவில் இருந்தும் கூட மக்கள், இவனிடம் வைரத்தைப் பரிசோதிப்பதற்காக வந்தார்கள்.

ஒரு நாள் அவனது மாமா கூறினார் மருமகனே, அந்த நெக்லஸை உன் அம்மாவிடம் இருந்து இப்போது வாங்கி வா! அவளிடம் கூறு. அதாவது மார்க்கெட் நிலைமை இப்போது நன்றாக இருக்கிறது. உனக்கு நல்லதொரு விலை கிடைக்கும்.

அவன் அம்மாவிடம் இருந்து நெக்லஸை பெற்றவுடன், அந்த வாலிபன், அவனாகவே அதனைப் பரிசோதித்தான்.

அது ஒரு போலி நெக்லஸ் என்பதைக் கண்டுபிடித்தான்.

அவனுடைய மாமா, ஒரு சிறந்த வல்லுநராக இருந்தும் இதை ஏன் நம்மிடம் தெரிவிக்கவில்லை? என்று அவன் ஆச்சரியம் அடையத் தொடங்கினான்.

நெக்லஸை வீட்டில் விட்டு, விட்டு அவன் கடைக்குத் திரும்பினான்.

மாமா கேட்டார், நெக்லஸைக் கொண்டு வரவில்லையா?

அவன் கூறினான், மாமா இது போலியானது. ஆனால், இதை என்னிடமிருந்து நீங்கள் ஏன் மறைத்தீர்கள்?

பிறகு அவன் மாமா கூறினார். நீ முதன்முதலில் நெக்லஸை என்னிடம் கொண்டு வந்த போது, "அது போலியானது" என்று நான் உன்னிடம் கூறியிருந்தால், நான் வேண்டுமென்றே இதைக் கூறுவதாக நீ நினைத்துக் கொள்ளக் கூடும். ஏனென்றால், அப்போது நீ ஒரு கஷ்டமான சூழ்நிலையில் இருந்தாய்.

இன்று நீ, நீயாகவே இதைப் பற்றிய அறிவைப் பெற்றிருப்பதால், இந்த நெக்லஸ், "உண்மையிலேயே போலியானது" என்பதை நீ உறுதியாக அறிந்திருப்பாய்.

அந்த நேரத்தில், "உண்மையைக்" கூறியாக வேண்டும் என்பதை விட "உறவு இழையை அறுந்து விடாமல் காப்பது முக்கியமானதாக" எனக்குத் தோன்றியது.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## வாக்னர் கூலிப்படையின் தலைவரை கொல்வதற்கு ரஷ்யா சதித்திட்டம்

### உக்ரைன் புலனாய்வு பிரிவின் தலைவர் தெரிவிப்பு



(கீவ்)

வாக்னர் கூலிப்படையின் தலைவர் யெவ்ஜென்ஜி பிரிகோஜினை கொல்வதற் கான ரஷ்யாவின் சதிமுயற்சி குறித்து உக்ரைனின் புலனாய்வு பிரிவின் தலைவர் பரபரப்பு தகவல்களை வெளியிட்டுள்ளார்.

வாக்னர் குழுவினர் புடின் அரசாங்கத்திற்கு எதிராக திரும்பியதை தொடர்ந்தே அவரை கொலை செய்வதற்கான முயற்சிகள் இடம்பெறு கின்றன என உக்ரைன் புலனாய்வு பிரிவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் புலனாய்வு பிரிவான எவ்எஸ்பியிடம் வாக்னர் கூலிப்படையின் தலைவரை கொல்வதற்கான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாக உக்ரைன் புலனாய்வுப் பிரிவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

பேட்டியொன்றில் இதனைக் குறிப்பிட்டுள்ள அவர் ரஷ்யப் புலனாய்வுப் பிரிவினர் ஏற்கனவே இதற்கான திட்டங்களை வகுக்க தொடங்கியுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பிரிகோஜினை கொல்வதற்கான உத்தரவு எவ்எஸ்பிக்கு வழங்கப்பட்டுள்ளதை நாங்கள் அறிவோம். ஆனால் அவர்கள் அதில் வெற்றி பெறுவார்களா என்பதை காலமே தெரிவிக்கும் என உக்ரைனின் புலனாய்வுத் துறையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி புடினிற்கு நெருக்கமான வட்டாரங்களும் இதனை உறுதி செய்துள்ளன. வாக்னர் கூலிப்படையின் தலைவருக்கு நஞ்சூட்டப்படலாம் என அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (நி)

## பிரான்ஸில் தொடரும் அமைதியின்மை



(பாரீஸ்)

பிரான்ஸ் நகரங்கள் கடந்த ஐந்து இரவுகளாக தொடர்ந்து கலவரத்தால் பற்றியெரிந்து வருகிறது. 17 வயதான இளைஞர் நஹெல் பொலிஸாரால் சுடப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட நிலையில், நீதி கேட்டு பொதுமக்கள் கலவரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிரான்ஸ் நகரங்கள் பல கலவரத்தில் சிக்கி, பற்றியெரியும் நிலையில், பாரிஸ் நகரத்தில் உள்ள ஐக்கிய அரபு அமீரக குடிமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதில், வன்முறை மற்றும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படும் பகுதிகளிலிருந்து விலகி இருக்குமாறு குடிமக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது. அத்துடன், பிரான்ஸ் நிர்வாகம் இது தொடர்பில் விடுத்துள்ள கட்டுப்பாடுகளை அமீரக மக்களும் பின்பற்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளது.

பொலிஸ் வன்முறைக்கு கொல்லப்பட்ட இளைஞர் நஹெல் உடல் தற்போது நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில், கலவரம் பல்வேறு பகுதிகளில் பரவியுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில் பிரான்ஸ் அரசாங்கம் 45,000 பொலிஸாரையும் பல கவசவாகனங்களையும் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தியுள்ளது. நாடு முழு வதும் பரவியுள்ள அமைதியின்மையால் கட்டடங்கள் மற்றும் வாகனங்கள் தீவைக்கப்பட்டு கடைகள் சூறையாடப்பட்டுள்ளன.

முன்னதாக கனடாவும் பிரித்தானியாவும் பாரிஸ் கலவரம் தொடர்பில் தங்கள் குடிமக்களை எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.. (நி)

## ஸ்பெயின் பிரதமர் விஜயம் செய்துள்ள நிலையில் உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல்

### 3 பேர் உயிரிழப்பு

(கீவ்)

ஸ்பெயின் பிரதமர் உக்ரைனுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். இந்த சமயத்தில் உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் மேற்கொண்டது. இத் தாக்குதலில் 3 பேர் உயிரிழந்துள்ளனர். உக்ரைன் மீது ரஷ்யா நடத்திவரும் ராணுவ நடவடிக்கையின் விளைவாக உக்ரைன் உட்கட்டமைப்புகள் முற்றிலும் சிதைந்துள்ளன. உக்ரைனின்பல்வேறு நகரங்களை ரஷ்யப் படைகள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

அவர்களை வெளியேற்றுவதற்காக உக்ரைன் படைகள் தீவிரமாக சண்டையிட்டு வருகின்றன. உக்ரைனுக்கு மேற்கத்தேய நாடுகள் தொடர்ந்து நிதியுதவியும் ஆயுத உதவியும் வழங்குகின்றன. இந் நிலையில் உக்ரைனுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான் செஸ், உக்ரைனில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். உக்ரைன் பாரா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆபிரிக்காவில் கோர விபத்து!

## 51 பேர் உயிரிழப்பு 32 பேர் படுகாயம்!

(நெய்ரோபி)

**கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள நெடுஞ்சாலை ஒன்றில் இடம்பெற்ற கோர விபத்தில் 51 பேர் உயிரிழந்துள்ளனர்.**



கிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள கெய்னா நாட்டின் தலைநகர் நெய்ரோபியில் இருந்து 200 கிலோமீற்றர் தொலைவில் உள்ள லண்டைனி மாகாணம் ரிப்ட் வெலி நகரில் நெடுஞ்சாலை அருகே சந்தை பகுதி உள்ளது.

இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த லொறி திடீரென கட்டுப்பாட்டை இழந்து சந்தைக்குள் நுழைந்துள்ளது.

சந்தைக்குள் இருந்த கடைகள் மீதும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் மீதும் லொறி வேகமாக மோதியதை அடுத்து விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த கோர விபத்தில் 51 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 32 பேர் படுகாயமடைந்துள்ளனர். (நி)

# ஜேர்மனின் பயணத்தை இரத்து செய்தார் மக்ரோன்



(பாரிஸ்)

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் ஜேர்மனிக்கு மேற்கொள்ளவிருந்த பயணத்தை ஒத்திவைத்துள்ளதாக அறிவித்துள்ளார்.

நாடு முழுவதும் தொடர்ந்தும் கலவரம் இடம்பெற்று வரும் நிலையில் இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பொலிஸ் அதிகாரியால் சுடப்பட்ட அல்ஜீரிய மற்றும் மொராக்கோ வம்சாவளியைச் சேர்ந்த 17 வயதான சிறுவனின் இறுதிச் சடங்கு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிலையில் சுமார் 45,000 அதிகாரிகள் இலகுரக கவச வாகனங்களின் ஆதரவுடன் நிலை நிறுத்தப்பட்ட போதிலும், வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியிருந்தன.

வன்முறை சம்பவங்களை அடுத்து 1,311 பேர் ஒரே இரவில் கைது செய்யப்பட்டதாகவும் இதற்கு முதல்நாள் இரவில் 875 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேநேரம் 700க்கும் மேற்பட்ட கடைகள் பல்பொருள் அங்காடிகள், உணவகங்கள் மற்றும் வங்கிகள் கடந்த செவ்வாய்க் கிழமை முதல் சூறையாடப்பட்டதாக நிதி அமைச்சர் அறிவித்துள்ளார். (நி)

# சூரியனை விட 30 பில்லியன் மடங்கு பெரிய கருந்துளை கண்டுபிடிப்பு

வானியல் விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பின் படி சூரியனை விட 30 பில்லியன் மடங்கு பெரிய கருந்துளை கண்டறியப்பட்டுள்ளது. இதுவே மிகப் பெரும் கருந்துளை என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். உயிரினங்கள் வசிக்கக் கூடிய பூமி, சூரிய குடும்பத்தை சேர்நததாகும்.

சூரியன் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான நட்சத்திரங்கள் இணைந்து பால்வெளி அண்டம் என்று அழைக்கப்படுகிறது. இந்த பால்வெளி அண்டத்தின் மையப்பகுதியில் மிகப் பெரிய கருந்துளை இருப் பதாக விஞ்ஞானிகள் முன்பு கண்டுபிடித்திருந்தனர். நடைமுறையில் இருக்கும் இயற்பியல் விதிகளுக்கு அப்பாற்பட்டு கருந்துளைகள் செயற்படுகின்றன.

இதனை கடந்து செல்லும் எதனையும் உள்ளே இழுத்துக் கொள்ளும் ஆற்றல் கருந்துளைக்கு உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. அந்த வகையில் சூரியனைக்கூட இவை உள்ளே இழுத்துக்கொள்ளும் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில், சூரியனை விடவும் 30 பில்லியன் மடங்கு பெரியதான கருந்துளை ஒன்றை வானியல் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். ஒரு பில்லியன் என்பது 100 கோடியாகும். பென்ட் லைட் எனப்படும் அறிவியல் முறை மற்றும் ஈர்ப்பு விதியை பயன்படுத்தி இந்த கருந்துளை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (நி)

# ஜேர்மனியில் மிக நீளமாக அமைக்கப்பட்ட தொங்கு பாலம்



(பேர்லின்).

ஜேர்மனியில் மிக நீளமாக அமைக்கப்பட்ட தொங்குபாலம் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த பாலமானது 100 மீற்றர் உயரத்தில், 600 மீற்றர் நீளத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த கட்டுமானத்திற்கு 4.5 மில்லியன் யூரோக்கள் செலவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்கைவாக் என்று அழைக்கப்படும் இந்த நடைபாதையைப் பயன்படுத்தி, சுற்றியுள்ள கிராமப் புறங்கள் அனைத்தையும் உயரத்திலிருந்து கண்டு களிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த பிரமாண்ட தொங்குபாலமானது உலகம் முழுவதிலுமுள்ள சாகச விரும்பிகளையும் சுற்றுல்லாப் பயணிகளையும் ஈர்க்கும் விதத்தில் கட்டப்பட்டுள்ளது. (நி)

# உலகில் அமைதியான நாடாக ஐஸ்லாந்து

## 15 ஆவது தடவையாக தொடர்ந்தும் முன்னிலையில்



உலகளாவிய அமைதி குறியீட்டின் படி, இந்த ஆண்டு ஐஸ்லாந்து தொடர்ந்து 15 ஆவது முறையாக உலகின் மிகவும் அமைதியான நாடாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், சிங்கப்பூர், போர்ச்சுகல், ஸ்லோவேனியா, ஜப்பான் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளும் முதல் 10 இடங்களில் இடம்பெற்றுள்ளன.

இதன்போது முன்னதாக தரவரிசையில் முதலிடத்தில் இருந்த கனடா, செக் குடியரசு, நியூசிலாந்து, குரோஷியா ஆகிய நாடுகள் இந்த ஆண்டு பட்டியலில் குறைந்த இடத்தைப் பிடித்துள்ளன.

உலகளவில் ஐரோப்பா மிகவும் அமைதியான பகுதி என்று கூறப்படுகிறது.

அதேவேளை, ஆப்கானிஸ்தான் உலகின் மிகவும் ஆபத்தான நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)



அளித்தனர். அப்போது பேசிய அவர், உக்ரைன் மீதான ரஷ்யாவின் சட்டவிரோத மற்றும் நியாயமற்ற ஆக்கிரமிப்புக்கு எதிராக ஐரோப்பிய யூனியன் மற்றும் ஐரோ

ளுமன்றத்தில் அவர் உரையாற்றியபோது உறுப்பினர்கள் எழுந்து நின்று கைதட்டி உற்சாக வரவேற்பு

ப்பாவின் உறுதியான ஆதரவை தெரிவிக்கவேண்டும் என்றும் விருப்பதாக தெரிவித்தார் (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# ‘மூட்டுவலி, உடல் வலியும் - வாதநாராயணன் முடக்கறுத்தான் மூலிகைகளும்’

இன்று உலகத்தையே ஆட்டிப் படைக்கும் வியாதிகளில் கொடிய வியாதி மூட்டு வலியாகும்.

“மூட்டுவாதம், எலும்பு மூட்டுக்களைத் தாக்கி இருதயத்தையும் கடிக்கும்” என்பது மருத்துவ பழமொழி. ஆனால் மனிதன் சர்வசாதாரணமாக நினைத்து வலி ஏற்படும் போது வலி நிவாரண மாத்திரைகளைச் சாப்பிட்டு வலிகளை அமுக்கி விடுகின்றான். உண்மையில் வலி என்பது வியாதி அல்ல. இது ஒரு வியாதியின் அறிகுறி ஆகும்.

வலியினால் மனிதனை நடக்க முடியாமல், உட்கார முடியாமல், படுக்க முடியாமல் தவிக்க வைக்கும் கொடுமையான நோய் மூட்டு வலியாகும். இவ்வியாதி கூட எமது உணவுப் பழக்கவழக்க மாறுபாட்டாலும் மற்றும் வாழ்க்கை முறை மாறுபாட்டாலும் இளம் பருவத்திலேயே வந்து விடுகிறது.

எனவே வலி நிவாரணி மாத்திரைகளை அடிக்கடி மேற்படி நோய் நிலைகளில் பயன்படுத்துவதை விட எமது பிரதேச மூலிகைகளான வாதநாராயணன், முடக்கறுத்தான் மூலிகைகளை எவ்வாறு பயன்படுத்தி பயனடையலாம் என பார்ப்போம்.

### வாதநாராயணன்

இது சுமார் 5.6 மீற்றர் உயரம் வரைக்கும் பல கிளைகளுடன் சிறிது அடர்த்தியாக வளரும் மரம்.


Botanical Name - Delonix alata
Family - Caesalpiniaceae

வாதநாராயணன் கீரையை ஒரு கைப்பிடி அளவு எடுத்து கசாயமாக்கி குடித்தால் மூட்டு வலி, இடுப்புவலி, கழுத்துவலி என்பன குணமாகும். வாதநாராயணன் இலைகளை இரண்டு கைப்பிடி அளவு எடுத்து சட்டியிலிட்டு நல்லெண்ணெயிட்டு வதக்கி கடுகு, உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை, இஞ்சி, கொத்தமல்லி, மிளகாய் இவற்றை இதனுடன் வெள்ளைப் பூண்டும் சேர்த்து சிவக்க வதக்கி சிறிதளவு உப்பு சேர்த்து அரைத்து சோற்றுடன் கலந்து பிசைந்து உண்டு வர மலம் இலகுவாக கழிவதுடன் மூட்டுவலிகள், உடல் வலியும் நன்றாக குறையும்.

முடக்குவாதத்திற்கு வாதநாராயணன் கீரை ஒரு கைப்பிடியளவு எடுத்து உள்ளி 3 பல், சுண்டங்காய் 25 கிராம், பெருங்காயம் சேர்த்து சிறிதளவு நல்லெண்ணெயில் அரைத்து சாப்பிட்டு வர சிறந்த நிவாரணியாகும்.

வாதநாராயணன்இலையை உலர வைத்து அதனுடன் அரிசித்தவிடு சேர்த்து வறுத்து துணியில் முடிந்து கட்டி ஆவியில் சூடு காட்டி வலியுள்ள இடங்களிற்கு ஒற்றடம் இடலாம். வலி நன்கு குறையும்.

வாதநாராயணன் கீரையை உலர்த்தியோ பொடித்தோ அல்லது பச்சையாகவோ குரக்கன்



மாவுடன் சேர்த்து தோசை செய்து சாப்பிட்டு வந்தாலும் உடல்வலி, மூட்டுவலி குறையும்.

### வாதநாராயணன் கீரை சூப்

வாதநாராயணன் கீரை இரண்டு கைப்பிடி, மிளகு-8, சுக்குப்பொடி-1/2 தேக்கரண்டி, பெருங்காயம்-1/4 தேக்கரண்டி, உள்ளி 3 பல், சீரகம்-தேவையான அளவு, சின்ன வெங்காயம்-தேவையான அளவு, உப்பு-சிறிதளவு, நெய்-1 தேக்கரண்டி.

வாதநாராயணன் கீரையுடன் சீரகம், பெருஞ்சீரகம், வெட்டிய வெங்காயம், பூண்டு, பெருங்காயம், சுக்குப்பொடி, மிளகு ஆகியவற்றை 8 டம்ளர் நீர் விட்டு 2 டம்ளராக வற்றப் பண்ணி பருகவும். அடிக்கடி தயாரித்து குடித்து வந்தால் மூட்டுவலி, உடல்வலி தணியும்.

வாதநாராயணன் இலைகளை உலர்த்தி, பொடி செய்து 5 கிராம் அளவு பொடியை 200 மில்லி வெந்நீரில் 10 நிமிடங்கள் வரை ஊறவைத்து சாப்பிட்டால் மூட்டுக்களில் மாறி மாறி ஏற்படும் வலி தணியும்.

வாதநாராயணன் மூலிகையை வாரத்தில் மூன்று நாட்களாவது மூட்டுவலி உள்ளவர்கள் பயன்படுத்த வேண்டும்.

### முடக்கறுத்தான்

எங்கும் வேலிகளில் ஏறிப் படரும் ஏறுகொடி. இதன் நுனியில் சிறுபற்றுக்கம்பி இருக்கும். தரிசு நிலங்களிலும் தோட்டக் கரைகளிலும் இயற்கையாக பரம்பி காணப்படும்.

தாவரவியற் பெயர் Cadio spermum Halicacobum
குடும்பம் - Sopindacead

**100 கிராம் இலையிலுள்ள சத்துக்கள்:**

புரதம் -4. 7 கிராம், கொழுப்பு- 0.6 கிராம், காபோவைதரேற்று- 9.1 கிராம், சக்தி 61 கிலோ கலோரிகள்.

அரிசி உழுத்தம்மாவை அரைப்பதுடன் அதன் இலைகளையும் சேர்த்தரைத்து தோசை செய்து சாப்பிட்டால் என்புகள் பலப்படுவதுடன் வாத நோய்களும் குணப்படும்.

இதன் கொடிகளை சேகரித்து 1 பங்கு கொடிக்கு 4 பங்கு நீர்விட்டு 1/4 பங்காக சுண்டக் காய்ச்சி 60 மில்லி காலை, மாலை 11 நாட்கள், அருந்தி வர நரம்பு சம்பந்தமான பிடிப்புக்கள் நாளடைவில் குணமடையும்.

இதன் இலைகளில் சாறு எடுத்து 300 மில்லி சாற்றிற்கு 600 மில்லி தேங்காய் எண்ணெயிட்டு தைல பதத்தில் காய்ச்சி வடித்து வலியுள்ள மூட்டுகளுக்கும் பூசலாம்.

முடக்கறுத்தான் கீரை, வாத நாராயணன் கீரை இரண்டையும் சமஅளவு எடுத்து அவற்றோடு உள்ளி 1 பல், மஞ்சள் தூள் சிறிதளவு ஆகியவற்றை சேர்த்தரைத்து அதிகாலையில் 5-10 கிராம் அளவு சாப்பிட்டு வந்தால் அனைத்து விதமான மூட்டு வலிகளும் குணமாகும். முடக்கறுத்தான் கீரை சாற்றில் உளுந்து, கறுப்பு எள்ளு இரண்டையும் சம அளவு எடுத்து ஊற வைத்து உலர்த்தி பொடியாக்கி 50 கிராம் அளவு எடுத்து சின்ன வெங்காயம்- தேவையான அளவு, உப்பு சேர்த்து கஞ்சி காய்ச்சி குடித்து வந்தால் எல்லா விதமான மூட்டு வலியாகினும் படிப்படியாக குறைய ஆரம்பிக்கும்.

### முடக்கறுத்தான் ரசம்

எலுமிச்சம்பழம்-1, தக்காளி-3, சீரகம்- 2 தேக்கரண்டி, , உள்ளி -6 பல், முடக்கறுத்தான் கொடி பொடியாக நறுக்கியது - 5 கைப்பிடி அளவு, 1000 ml நீர், பசுநெய் - 1 தேக்கரண்டி. முடக்கறுத்தானை தண்ணீரில் வேக வைக்க வேண்டும். வெந்ததும் நெய் விட்டு சீரகம் -1 தேக்கரண்டி போடவும். சீரகம் வெடித்ததும் முடக்கறுத்தான் ரசத்தை ஊற்ற வேண்டும். தக்காளியை கடைந்து எலுமிச்சம்பழ சாறு பிழிந்து ஊற்றி உப்பை போட்டு சீரகம், மிளகு, பூண்டு இவற்றை உடைத்து போட்டு கருவேப்பிலை உருவி போட்டு ரசம் ஒரு கொதி வந்ததும் இறக்கி வைத்து ஆறவிட்டு 200 மில்லி அளவு குடிக்கவும். இவ்வாறு 3 வாரம் குடித்து வர மூட்டுவலி, வாதநோய்கள் படிப்படியாகக் குறையும்.

முடக்கறுத்தான் இலைகளை உடைத்து உளுந்துடன் சேர்த்தரைத்து தோசை செய்தும் சாப்பிட்டு வரலாம். பக்கவாதம் உள்ளவர்கள் சுக்கு, மிளகு, ஏலம், சீரகம், முடக்கறுத்தான் இலை உலர்ந்த பொடி வாதநாராயணன் இலை உலர்ந்த பொடி எல்லாம் சம அளவு எடுத்து பொடித்து அரிந்து 2 கிராம் அளவு வெந்நீரில் காலை, மாலை சாப்பிட்டு வர தசைகளும் மூட்டுக்களும் பலம் பெறும்.

இதைத் தவிர்த்து வலி நிவாரணி மாத்திரைகளைப் பயன்படுத்தினால் தற்காலிக பலனையும் பக்கவிளைவுகளையும் கொண்டு வர வாய்ப்புள்ளது. இவ்வாறான பிரதேச மூலிகைகளை உணவுக் கூறாகவோ, குடிநீராகவோ, வெளிப் பூச்சு மூலிகை மருந்தாகவோ பயன்படுத்தி வர பக்க விளைவுகளற்ற பயனைப் பெறலாம்.

இவ்வாறான மூலிகைகளை கீரையாக, இரசமாக , சூப்பாக, தோசை, கஞ்சிபோன்ற முறைகளில் பயன் படுத்தி வர உடல் ஆரோக் கியமும் சீராக பேணப்படும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

### இலைக்கீரை வகைச் சுண்டல்

வாதநாராயணன், முடக்கறுத்தான், கறிமுருங்கை, முல்லை, முசுட்டை, அகத்தி, முள்ளங்கி இலை, கொடிப் பூசணித் தளிர், குப்பைமேனி இவற்றுள் ஏதாவது சில இலைவகை

தேங்காய்த்துருவல் -பால் பிழிந்த பூவை பாவிக்க லாம். ( பிழிந்த பூவில் போதிய புரதம் உண்டு) பச்சை மிளகாய்-5, வெங்காயம்-5, உப்பு-தேவையான அளவு, இறால் கருவாடு அல்லது கூனி இறால் (விரும்பின்)

### செய்முறை

ஒரு பிடி இலைக்கீரையை கழுவித் துப்பரவாக்குவோம் இவற்றை குறுனல்களாக அரிந்து எடுப்போம். பச்சை மிளகாய், வெங்காயம் இவைகளைத் துப்பரவாக்கி வெட்டி கொள்வோம்.


முதலில் வெட்டிய வெங்காயம் ,பச்சை மிளகாய் முதலியவற்றை தாச்சியில் இடுவோம். சிறிதளவு நீர் விட்டு வேக வைப்போம்.

வெந்ததும் கீரையில் தேவைக்குரிய அளவு உப்புச் சேர்த்து வெங்காயம், மிளகாய் முதலானவைகளை நன்கு கடைந்து கொள்வோம்.

நறுக்கிய கீரையுடன் பிழிந்த தேங்காய் பூவைச் சேர்த்து, முன் கடைந்த பச்சை மிளகாய், வெங்காயக் கூட்டுடன் கலந்து பிசைந்து கொள்வோம். மெல்லியதாக எரியும் நெருப்பில் இத் தாச்சியை வைத்து சில நிமிட நேரம் வேக விடுவோம். ஓர ளவு வெந்ததும் இறக்கி ஆறவிடவும். தேசிப்புளி சேர்க்கவும் .

இறால், கருவாடு பெறும் வசதியிருப்பின் அவைகளை நன்கு கழுவித் துப்பரவாக்கிய பின் வெங்காயம், பச்சை மிளகாய் வேக வைக்கும் வேளையில் சேர்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மன்னார் மருத மடு திருத்தலத்தின் ஆடி மாதத் திருவிழா திருப்பலி நேற்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் துணை ஆயர் அன்ரன் ரஞ்சித் ஆண்டகை இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர். இத் திருவிழாவில் அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டனர். (படங்கள்- ஜோசப்நயன்)

# பொதுமக்களுக்கு இடையூறு விளைவிப்போர் மீது கடும் நடவடிக்கை- பொலிஸார் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியில் வீதியோர பழக் கடை வியாபாரிகள் சிலர் பெண்களுடன் முறைதவறிப் நடப்பதாக பல்வேறு முறைப் பாடுகள் கிடைக்கின்றன. இவை தொடருமானால் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டி நேரிடும் என்று பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பழம் வாங்கச் சென்ற பெண்ணுடன் முறைதவறி உரையாடினார் என்று தெரிவித்து பழக்கடை வியாபாரி ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு தாக்குதல் நடத்திய குற்றச் சாட்டில் நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நகர் பகுதியில் வியாபாரத்தில் ஈடுபடுவர்கள் நுகர்வோருடன் நாகரீகமான முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்றும், . வீதியோர வியாபாரத்தில் ஈடுபடும் சிலரது நடவடிக்கையால் பொது மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெறும் நிலையில், எதிர்காலத்தில் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டு அவ்வாறானவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-6)

# அரியாலை ஸ்ரீ மஹாமாரி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலை பிரப்பங்குளம் ஸ்ரீ மஹாமாரி அம்பாள் கோயில் நவகுண்ட பக்ஷ புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்துதல் வைபவம் காலை 6 மணி முதல் மாலை 4 மணிவரை இடம்பெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8.42 மணி முதல் 10.42 மணி வரையுள்ள சுப வேளையில் மஹா கும்பாபிஷேகம் இடம் பெறவுள்ளது. (4-6)



நூறு பாடசாலை மைதானங்களை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் 3.2 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைப்புச் செய்யப்பட்ட உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானம் கடந்த வெள்ளிக்கிழமை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் திறந்து வைக்கப்பட்டது. (படம்-சுபேசன்-மகாலிங்கம்)



உரும்பிராய் மேம்பாட்டு ஒன்றியத்தின் திறப்புவிழா கடந்த மாதம் 17 ஆம் திகதி இடம்பெற்றது.




தினேஷ்

நாம நல்லா இருக்கனும்னு நினைக்குறவங்களவிட



இவன் எப்படிடா நல்லா இருக்கான்னு நினைக்குறவங்கதான் அதிகம்...

மல்லூக்கா

ஏன் நீங்க நடந்து போறவங்க சைக்கிள்ல போறவங்கள தொறத்துறீங்க...



அவங்க இன்னும் கொஞ்சம் வேகமா போறதுக்கும்... பிட்டா இருக்கிறதுக்கும் தான்...

யவாகர்



பால் குடிச்சதுக்கு ஃபைனா இதெல்லாம் நியாயமில் லைங்க சேர்...

கல்யாணி

நாம சொல்றது பொய்ன்னு தெரிஞ்சும் நம்புறது அம்மா...



சொல்றது உண்மைனு தெரிஞ்சும் நம்பாதது மனைவி...

நிரோஜா

படிக்கும் போது, படிச்சா தான் பெரிய ஆளாக முடியும்ன்னு சொல்லுற...
அப்புறம் சாப்பிடும் போது, சாப்பிட்டா தான் பெரிய ஆளாக முடியும்னு சொல்லுற...
உன்ன புரிஞ்சுக்கவே முடியல்லம்மா...



சிவானுஜா

எவ்வளவு கொட்டிக்கொடுத்தாலும் பணக்காரனால் வாங்க முடியாது, கொட்டிக் கொடுக்காவிட்டாலும் ஏழையால் வாங்க முடிந்த ஒரே விடயம் நிம்மதியான உறக்கம்.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்கியின்** பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

## காவியத் தொடர்

219





"உமது வேலை முடியவில்லை. இப்போதுதான் ஆரம்பமாகியிருக்கிறது!"

"தாங்கள் சொல்லுவது ஒன்றும் விளங்கவில்லை, தேவி!"

"உம்மிடம் அந்தரங்கமான வேலை எதையும் நம்பி ஒப்புவிக்கலாம் என்று இதில் இளவரசர் எழுதியிருக்கிறாரே? அதன்படி நீர் நடந்து கொள்ளப் போவதில்லையா?"

"இளவரசரிடம் அவ்விதம் ஒப்புக் கொண்டுதான் வந்தேன். ஆனால் என்னை நம்பி முக்கியமான வேலை எதுவும் ஒப்புவிக்க வேண்டாம். தங்களை ரொம்பவும் கேட்டுக் கொள்கிறேன்."

"உமது கோரிக்கை எனக்கு விளங்கவில்லை. ஒன்றை ஒப்புக் கொண்ட பிறகு பின்வாங்குவதுதான் வாணர் குலத்தின் மரபா?"

"பழம் பெருமை பேசுவது வாணர் குலத்தின் மரபு அன்று. ஒப்புக் கொண்டு பின்வாங்குவதும் வாணர் குலத்து மரபு அன்று."

"பின்னர், ஏன் தயக்கம்? பெண் குலத்தின் பேரில் கொண்ட வெறுப்பா? அல்லது என்னைக் கண்டால் பிடிக்கவில்லையா?" என்று இளவரசி கூறி இளநகை புரிந்தாள்.

ஆகா! இது என்ன கேள்வி? கடலுக்குச் சந்திரனைப் பிடிக்காமல் போகுமா? பிடிக்கவில்லையென்றால் ஆயிரம் அலைக் கைகளையும் நீட்டிப் பூரண சந்திரனை ஏன் தாவிப் பிடிக்க முயல்கிறது? நீல வானத்துக்குப் பூமாதேவியைப் பிடிக்கவில்லையென்று யார் சொல்லுவார்கள்? பிடிக்காது போனால், இரவெல்லாம் ஆயிரமாயிரம் நட்சத்திரக் கண்களினால் இந்தப் பூமியை உற்று உற்றுப் பார்த்து ஏன் பூரித்துக் கொண்டிருக்கிறது? மேகத்துக்கு மின்னலைப் பிடிக்காதிருக்குமா? பிடிக்கவில்லையென்றால், தன்னைப் பிளந்து கொண்டு பாய்ந்தோடும் மின்னலை அப்படி ஏன் இறுகத் தழுவி மார்போடு அணைத்துக் கொள்கிறது? வண்டுக்கு மலர் பிடிப்பதில்லையென்பது உண்டா? அங்ஙனமானால் ஏன் ஓயாமல் மலரைச் சுற்றி வட்டமிட்டு மதி மயங்கி விழுகிறது? விட்டில் பூச்சிக்கு விளக்கைப் பிடிக்கவில்லையென்றால் யாரேனும் நம்புவார்களா? அவ்வாறெனில், ஏன் அந்த விளக்கின் ஒளியில் விழுந்து உயிரை விடுகிறது? தேவி! நல்ல கேள்வி கேட்டீர்! தங்களை எனக்குப் பிடிக்கவில்லையென்றால் தங்களது கடைக்கண் பார்வை என்னை ஏன் இப்படித் திகைக்க வைக்கிறது? தங்களது இதழ்களின் ஓரத்தில் விளையாடும் இளநகை என்னை ஏன் இவ்விதம் சித்தப்பிரமை கொள்ளச் செய்கிறது?. இவ்வளவு எண்ணங்களும் வந்தியத்தேவனுடைய உள்ளத்தில் தோன்றின. ஆனால் நாவினால் சொல்லக்கூடவில்லை.

"ஐயா! என்னுடைய கேள்விக்கு மறுமொழி சொல்லவில்லையே? வாணர் குலத்தில் பிறந்த வீரபுருஷன் கேவலம் ஒரு பெண்ணின் ஏவலைச் செய்வதா என்று தயக்கமா? இளவரசர் உங்களிடம் இந்த ஓலையைக் கொடுத்த போது இதில் எழுதியிருப்பதைப் பற்றிச் சொல்லவில்லையா?" என்று இளவரசி மீண்டும் வினவினாள்.

"தேவி! இளவரசர் விருப்பத்தை நன்கு தெரிந்து கொண்டு தான் புறப்பட்டு வந்தேன். ஆனால் நல்ல வேளையில் என் யாத்திரையைத் தொடங்கவில்லையெனத் தோன்றுகிறது. ஆகையால் வழியெல்லாம் விரோதிகளைச் சம்பாதித்துக் கொண்டு வந்தேன். உற்ற நண்பனையும் பகைவன் ஆக்கிக் கொண்டேன்.

நாலாபுறத்திலும் பகைவர்கள் என்னைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் தாங்கள் இடும் பணியை நான் நிறைவேற்றுவதாக எப்படி உறுதி சொல்ல முடியும்? இதனால் தான் தயங்குகிறேன். என்னால் தங்கள் காரியம் கெட்டுப் போகக் கூடாதல்லவா?" என்று சொன்னான் வல்லவரையன்.

"யார் யார் அந்தப் பகைவர்கள்? எனக்குத் தெரிவிக்கலாமா?" என்று குந்தவை கவலை தொனித்த குரலில் கேட்டாள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## புதுச் செருப்பு



ஏதோ ஒரு திட்டத்துடன் தான் சிறுவர்கள் தன்னை உசுப்புகின்றனர் என்பதை முல்லா புரிந்து கொண்டார்.

"இதை விட நெட்டுக்குத்தான மரத்தில் எல்லாம் நான் ஏறி இறங்கி விளையாடி இருக்கிறேன் தெரியுமா?" என்றார் ஒரு சிறுவனைப் பார்த்து.

"அதெல்லாம் அந்தக் காலம், இப்போ கிழவராயிட்டீங்க!" என்றான் அவன். இந்த வார்த்தைகளைக் கேட்டதும் அவருக்கு "சுர்" என்று கோபம் வந்து விட்டது. என்னையா கிழவன் என்கிறாய்? இப்போதே இந்த மரத்தில் என்னால் ஏறி நான் கிழவனல்ல என்று நிரூபிக்க முடியும் என்று கத்தினார்.

"எங்கே ஏறுங்களேன், பார்க்கலாம்!" என்றனர் சிறுவர்களும் விடாப்பிடியாக.

வேறுவழி இல்லாமல், முல்லா மரம் ஏறுவதற்குத் தயாரானார். முதலில் செருப்புக்களைக் கழற்றினார். தான் கொண்டு வந்திருந்த பைக்குள் அவைகளைப் போட்டார். பையை இடுப்பில் கெட்டியாக செருகிக் கொண்டு, கிடுகிடு என்று மரம் ஏறினார்.

முல்லா மரம் ஏறும் போது தனது செருப்புக்களை மரத்தின் அடியில் விட்டுச் செல்வார். அவர் மரத்தின் மீது ஏறியவுடன் செருப்புக்களை கிளப்பிச் சென்று விட வேண்டும் என்று சிறுவர்கள் திட்டமிட்டு இருந்தனர்.

முல்லாவோ முன் எச்சரிக்கையாக, மடியில் செருப்புக்களை கட்டிக் கொண்டு மரம் ஏறுகிறார். தங்கள் திட்டம் தோல்வி அடைவதைப் பார்த்து சிறுவர்கள் திட்டமிட்டனர். எனவே ஒரு சிறுவன், முல்லாஜி, மரத்தின் மீது என்ன தெருவா இருக்கிறது.

"செருப்பையும் எடுத்துக் கொண்டு ஏறுகிறீர்களே அவைகளைக் கீழே எறியுங்கள்," என்றான் தந்திரமாக.

"ஒருவேளை இங்கு ஏதாவது தெரு இருந்து விட்டால், நான் மீண்டும் கீழே இறங்கி வந்து அல்லவா செருப்பை எடுத்துக் கொண்டு போக வேண்டி இருக்கும். இரண்டு வேலை எதற்கு? அது முட்டாள்த்தனமல்லவா? ஆகவே தான் செருப்புக்களைக் கையோடு எடுத்து வந்து விட்டேன்," என்று சொல்லியபடியே மரத்தின் மேல் கிளையில் அமர்ந்து கொண்டார்.

தங்கள் தந்திரம் பலிக்காததை அறிந்த சிறுவர்கள், "மாமா நீங்க கிழவரல்ல! கீழே இறங்கி வாருங்கள், நீங்கள் ஜெயித்து விட்டீர்கள்," என்று ஏமாற்றத்தோடு குரல் கொடுத்து அவரை அழைத்தனர். முல்லா புன் சிரிப் போடு, மரத்தில் இருந்து இறங்கினார். பெருமிதத்தோடு மடியில் இருந்த செருப்புக்களை எடுத்துக் கால்களில் அணிந்து கொண்டார். சிறுவர்களை வெற்றிப் பெருமிதத்தோடு ஒரு பார்வை பார்த்தார். பிறகு வீட்டை நோக்கி "டக் டக்..." என்று நடந்து போனார்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நகரங்களை உருவாக்க பல வருடங்கள் தேவை. அழிப்பதற்கு சில மணித்துளிகள் போதும் ! – ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# யாழ். நகரம் எமது உயர் பண்பாட்டை நிரூபிக்கும் கேந்திர ஸ்தானம்

யாழ்ப்பாண நகரத்தில் பழ வியாபாரம் நடைபெறுகின்ற இடத்தில் அநாகரிகமான வார்த்தைப் பிரயோகங்கள் இருப்பது பற்றி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள தான தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக அப்பகுதியால் செல்கின்ற பெண் பிள்ளைகளைக் கேலி செய்வது, சிலேடையில் கதைப்பது மற்றும் அநாகரிகமாக நடந்து கொள்வது பற்றியதாக அந்த முறைப்பாட்டில் விபரிக்கப்பட்டுள்ளது.

உண்மையில் இத்தகைய செயற்பாடுகள் தனித்து பழ வியாபாரம் இடம்பெறும் பகுதிகளில் மட்டும் நடைபெறுவதில்லை.

மாறாக யாழ்ப்பாணத்தில் குறிப்பிட்ட வீதிகளில் உள்ள குறிப்பிட்ட வர்த்தக நிலையங்களில் பணிபுரிகின்ற இளைஞர்களும் இவ்வாறான சேட்டைகளில் ஈடுபடுவது தொடர் கதையாகவுள்ளது.

அதிலும் சில கடைகளில் பணிபுரியும் இளைஞர்கள் பெண் பிள்ளைகளிடம் சேட்டை விடுவது, அநாகரிகமாக நடந்து கொள்வதான சம்பவங்கள் நிறையவே உள்ளன.

இதுதவிர, யாழ்.நகரத்தில் இளைஞர்கள் கூட்டமாகக் கூடிநின்று கதைக்கின்ற இடங்களிலும் பெண் பிள்ளைகள் மீதான சேட்டைகள் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

என்ன செய்வது சண்டித்தனப் பாங்கில் நடக்கின்ற இந்த அநியாயங்களைப் பொது மக்கள் மெளனமாக ஜீரணித்துக் கொள்கின்றனர்.

எனினும் இவ்வாறான நடவடிக்கைகளை யாரும் கட்டுப்படுத்துவதாக இல்லை.

அதிலும் குறிப்பாக, வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் தங்கள் வர்த்தக நிலையங்களில் பணிபுரிகின்ற இளைஞர்கள், வாடிக்கையாளர்களுடன் அல்லது அந்தப் பகுதியால் பயணிக்கின்ற பொதுமக்களுடன் எவ்வாறாக நடந்து கொள்கின்றனர் என்பது பற்றி இம்மியும் கவனிப்பதில்லை.

உண்மையில் வியாபார நிலையத்தின் உரிமையாளர்கள் விழிப்பாக இருப்பார்களாயின், அநாகரிகச் செயல்கள் நடக்காமல் தடுக்க முடியும்.

இருந்தும் இது விடயத்தில் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் ஏனோதானோ என்றிருப்பதன் காரணமாக பொதுமக்கள் மிகுந்த அசௌகரியங்களை யாழ்ப்பாண நகரத்தில் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

உண்மையில் யாழ்ப்பாண நகரம் என்பது எமது மக்களின் பண்பாட்டை, எமது மக்களின் உயர்ந்த கலாசாரத்தை வெளிப்படுத்துகின்ற கேந்திர ஸ்தானமாகும்.

இங்கு உள்ளூர் மக்கள் மட்டுமன்றி வெளிநாட்டவர்களும் நடமாடுகின்றனர்.

எனவே யாழ்ப்பாண நகரத்தில் எந்தப் பகுதியில் அநாகரிகமான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றனவோ அவை எங்கள் இனம் தொடர்பான கணிப்பை கணிசமான அளவில் தாழ்த்திக் கொள்ளும்.

ஆகையால் எம் தமிழ் இனத்தின் பெருமை காக்க யாழ்ப்பாண நகர வர்த்தகப் பெருமக்கள் அனைவரும் உதவ வேண்டும்.

# ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் தற்போது எதுவும் கூற வேண்டாம்

## பெரமுனவினருக்கு மகிந்த உத்தரவு

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க குறித்தோ அல்லது அறிவிக்கப்படாத ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் குறித்தோ ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவினர் கருத்துக்கள் எதையும் தெரிவிக்கக் கூடாது என்று அந்தக் கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன இரு அணிகளாகப் பிரிந்துள்ளது. அதில் ஒரு தரப்பு ரணிலுக்கு ஆதரவாகவும் மற்றைய அணி அவருக்கு எதிராகவும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது.

இது தொடர்பில் கட்சியின் தலைவர் என்ற ரீதியில் நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள் என்று மகிந்த ராஜபக்ஷ விடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதிலளித்தபோதே மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பிலேயே ரணில்விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கும் - அவர் தலைமையிலான அரசுக்கும் பொதுஜன பெரமுனவே ஆதரவளித்து வருகின்றது.

எனவே அவர் தொடர்பாகவோ அல்லது அரசு தொடர்பாகவோ எந்தவிதமான கருத்துக்களையும் பொதுஜன பெரமுவினர் தெரிவிப்பதை நிறுத்த வேண்டும்.

அறிவிக்கப்படாத ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகக் கருத்துக்களை வெளியிடுவது பிரயோசனமற்றது. ரணில் விக்கிரமசிங்க ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன்தான் ஜனாதிபதிப் பதவியைப் பெற்றார். இப்போதும் பெரமுனவின் ஆதரவுடன்தான் அந்தப் பதவியை அவர் வகிக்கின்றார்.

அவரின் பதவிக்காலம் நிறைவடையும் வரை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அவருக்கு ஆதரவளிக்கும். அதன் பின்னர் ஜனாதிபதித்தேர்தல் தொடர்பில் சிந்தித்து முடிவு எடுப்போம் என்றார். (4-7)

## சுகாதாரத்துறையில் தொடரும் அவலம்

# 167 மயக்க மருந்து நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள மயக்க மருந்து நிபுணர்கள் 167 பேர் நாட்டை விட்டு வெளியேறி இங்கிலாந்தில் பணிபுரியச் சென்றுள்ளதாக சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கடந்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் இதுவரை 323 விசேட வைத்தியர்களில் 160 பேர் வெளிநாடுகளுக்கு பணிபுரியச் சென்றுள்ளதாக சுகாதார அமைச்சின் பணிப்பாளர் (மூன்றாம் நிலை பராமரிப்பு சேவைகள்) டொக்டர் பிரியந்த அத்தபத்து தெரிவித்தார்.

இவர்களில் எதுவித அறிவித்தலும் இன்றி வெளியேறிய சில மருத்துவர்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4-7)

## மன்னாரில் விபத்து

# அருட்தந்தை ஒருவர் உள்ளிட்ட மூவர் காயம்

(மன்னார்)

மன்னார் - மதவாச்சி பிரதான வீதி இசைமாளத்தாழ்வு பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் மன்னார் மறை மாவட்டத்தின் முன்னாள் குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் உள்ளடங்களாக மூவர் காயமடைந்துள்ளனர்.

மடு திருத்தலத்தின் ஆடி மாத திருவிழா திருப்பலி நிறைவடைந்த நிலையில் நேற்று மாலை அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், சாரதி மற்றும் உதவியாளர் ஆகிய மூவரும் மடு திருத்தலத்தில் இருந்து மன்னார் நோக்கி ஹயஸ் ரக வாகனத்தில் பயணித்துள்ளனர்.

அவர் பயணித்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதியின் அருகில் உள்ள கம்பத்துடன் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளது. இதன் போது காயமடைந்த மூவரும் உடனடியாக அம்புலன்ஸ் வண்டி மூலம் முருங்கன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

தற்போது அருட் தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் உள்ளடங்கலாக மூவரும் சிறு காயங்களுடன் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-7)

# கார் - மு.வண்டி மோதி விபத்து

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் நேற்று கார் ஒன்றும் முச்சக்கர வண்டியொன்றும் மோதி விபத்துக்குள்ளாகியது.

இதில் இரு வாகனங்களும் பலத்த சேதத்திற்குள்ளாகியதுடன் முச்சக்கர வண்டி சாரதி சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த யாழ்ப்பாணம் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (4-7)

## கிளிநொச்சியில் திடீர் சோதனை

# பாவனைக்கு உதவாத உணவுகள் அழிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் பரிசோதனை நடவடிக்கையின் போது பாவனைக்கு உதவாத இறைச்சி மற்றும் உணவுப் பொருட்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பொதுச் சந்தை மற்றும் நகரில் அமைந்துள்ள உணவகங்கள் இப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. இதன் போது கிளிநொச்சி பொதுச் சந்தையின் மாட்டிறைச்சி விற்பனை கடையில் அனுமதியின்றி வெட்டப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த சுமார் 50 கிலோ வரையான மாட்டிறைச்சி கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதோடு வியாபாரிகளுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

மேலும் நகரில் ஏ9 பிரதான வீதி, கனகபுரம் வீதியில் அமைந்துள்ள பல உணவகங்களும் பரிசோதனைக்கு உட்பட்டுத்தப்பட்டன. இதன் போது சமைக்கப்பட்ட உணவுகளுடன் சமைக்காத இறைச்சி உள்ளிட்ட உணவுப்பொருட்கள் ஒரே குளிர்சாதனப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டு குறித்த உணவுப் பொருட்களும் அழிக்கப்பட்டன.

அத்தோடு பயன்பாட்டிற்கு உதவாத உணவுப் பொருட்களும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதோடு, உரிமையாளர்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

மேலும் சந்தைக்குள் பழக்கடைகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு அங்கிருந்த பழங்களை பழுக்க வைப்பதற்கான இரசாயன திரவியங்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

இனிவரும் காலங்களில் இப் பரிசோதனைகள் தொடர்ச்சியாக இடம்பெறும் எனவும் சட்டத்திட்டங்களுக்கு மாறாக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்கள் மீது சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** கல்லாரை-மல்லாகம் J.K.W.S.S.P Site office தாளையடி, மருதங்கேணி (தாளையடி) ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** கோறமல்லைக் குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

07




கலாநிதி க.தவலிங்கம்

ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.


விஜயவம்ச ஆட்சி தொடர்கிறது...

அநுராதபுர இராசதானியின் முதல் மன்னனாக பண்டுகாபயன் கொள்ளப்படுகிறான். பண்டுகாபய மன்னனால் தலைநகராக தெரிந்தெடுக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட அநுராதபுரம் இலங்கையின் கோனாட்சியின் முதல் உத்தியோக பூர்வ தலைநகரம் என்று புகழப்படுவது இங்கு நோக்கத்தக்கது.

அநுராதபுரத்தினை தலைநகராக கொண்டு ஆட்சி செய்த மன்னர்களினை பட்டியல்படுத்தி நோக்குவது இலங்கை வரலாற்றின் தொடர் தன்மையினை அறிய அவசியமாகின்றது. அந்த வகையில் முதல் மன்னனாக நோக்கப்படுபவன் பண்டுகாபயனாவான்.

**பண்டுகாபயன் (கி.மு. 437-367) பற்றி சில வரிகள்...**

பண்டுகாபயன் (கி.மு. 437-367) இலங்கையின் முதலாவதாகக் கருதப்படும் அரச மரபின நான்காவது அரசனாவான். இவன் இம்மரபின் இரண்டாவது அரசனான பண்டுவாசுதேவனின் மகள் வழிப் பேரனும் மூன்றாவது அரசனான அபய மற்றும் அவனைப் பதவியிலிருந்து இறக்கிய பின்பகர ஆளுநராக இருந்த தீசன் ஆகியோரின் மருமகனும் ஆவான்.

"பண்டுகாபய" என்று மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் இம்மன்னன் சிங்கள மன்னனாக மகாவம்சத்தில் சொல்லப்பட்டாலும் இவனது பெயர் "பண்டுகாபயன்" (பண்டு என்றால் "பழைய", காபயன் என்றால் "சிவன்") என்றும் இது இந்துக்களின் பழம் பெரும் தெய்வமான "முந்துசிவன்" என்ற பெயரை ஒத்து உள்ளது என்றும் இதன் மூலம் இவன் ஒரு தமிழ் மன்னன் என்றும் வாதிடப்படுகிறது. இதே வாதம் இவனது பாட்டனான பண்டுவாசுதேவன் என்பவனுக்கும் முன்வைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

அரசன் பண்டுகாபயன் தொடர்பான விளக்கங்கள் மகாவம்சம், தீபவம்சம் ஆகிய மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. பண்டுகாபயனுடைய தந்தை தீககாமினியாவார். இவர் பத்தகச்சானாவின் ஒரு சகோதரருடைய மகன் ஆவார். பண்டுகாபய இளவரசனின் தாயார் உன்மாதசித்திராவாகும். இதன்படி இளவரசன் பண்டுகாபயன் ஆரம்ப ஆரியர் குழுவின் பரம்பரையைச் சேர்ந்தவனாவான்.

இளவரசன் பண்டுகாபயன் தாயின் சகோதரர்கள் பலருடனும் போர் செய்து அவர்களைத் தோற்கடித்து அநுராதபுரத்தின் அரசனானான். ஆரியக் குடியேற்றங்கள் பலவற்றை ஒன்றிணைத்து ஒற்றையாட்சி உருவாகுவதற்கு இவர் ஆற்றிய சேவை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அநுராதபுரத்தை ஆட்சியின் மத்திய நிலையமாகத் தெரிவு செய்த இவனே அநுராதபுர இராச்சியத்தின் ஆரம்ப ஆட்சியாளனாவான். ஒழுங்கமைக்கப்பட்ட நிர்வாகமுறை, அரசன் பண்டுகாபயனால் ஏற்படுத்தப்பட்டது.

அநுராதபுர நகரம், வீதிகள், இறந்தவர்களை அடக்கம் செய்யும் மயான பூமி ஆகிய அம்சங்களைக் கொண்ட திட்டமிடப்பட்ட நகரமாக அமைக்கப்பட்டது. இவ்வரசன் தனது ஆட்சியின் பத்தாவது ஆண்டில் நாட்டின் கிராமங்களின் எல்லைகளை வகுத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நகர குத்திகன் என்ற பதவியும் நகர பரிபாலனத்திற்காக ஏற்படுத்தப்பட்டது. இப்பதவிக்கு அபய இளவரசன் நியமிக்கப்பட்டான்.

அரசுரிமை தொடர்பில் சகோதரனிடம் இருந்து சகோதரன் அல்லது தந்தையிடமிருந்து மகன் அரசுரிமையைப் பெற்றுக் கொள்ளுதல் அங்கீகரிக்கப்பட்டதாக விளங்கியது.

**மூத்தசிவன் (கி.மு 367 - 307)**

மூத்தசிவன் என்பவன் இலங்கையின் அநுராதபுர இராசதானியை கி.மு 367 தொடக்கம் கி.மு 307 வரை ஆண்ட அரசனாவான். பண்டுகாபயனின் மகனான இவனுக்கு அபயன், தேவநம்பியதீசன், மகாநாகன், உத்திய, மத்தபய, மித்த, மகாசிவன், சூரதீசன், அசேலன், கிரஎன்ற ஒன்பது ஆண் மகன்களும் அனுளா மற்றும் சீவலி என்ற மகள்களும் இருந்தனர். இவன் இலங்கையை அறுபது ஆண்டுகள் ஆண்டான். இவன் இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மகாமேகவனப் பூங்காவை அநுராதபுரத்தில் அமைத்தான்.

**தேவநம்பியதீசன் (கி. மு. 307- 267)**

மூத்தசிவனின் மகனான தேவநம்பியதீசன் அல்லது தீசன் என்பவர் கி. மு. 307 இலிருந்து கி. மு. 267 வரை அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆட்சி செய்த மன்னன் ஆவார். இவர் தனது ஆட்சிக் காலத்தில் பேரரசர் அசோகருடன் நட்புக் கொண்டிருந்தார். பௌத்த சமயத்தை இலங்கையில் அறிமுகப்படுத்தியதால் இவருடைய ஆட்சிக்காலம் முக்கியம் பெறுகின்றது. இவருடைய வரலாற்றைப் பற்றி அறிவதற்கு மகாவம்சம் உதவுகின்றது.

மகிந்ததேரர் உள்ளிட்ட குழுவினர் இலங்கைக்கு வருகை தந்தமை, இலங்கையில் புத்தசாசனம் அமைக்கப்பட்டமை, பிக்குணி சங்கமித்தை இலங்கைக்கு வருகை தந்தமை, அதன் பின்பு புத்தசாசனத்தை அமைத்தமை, புனித வெள்ளரச மரக்கிளையை நாட்டியமை என்பன தேவநம்பியதீசனுடைய காலத்தில் இடம்பெற்ற முக்கிய சமய நிகழ்ச்சிகளாகும். இலங்கைக் கலாசாரத்தில் புத்துணர்வு ஏற்படுவதற்கு இவை காரணமாகின.

**உத்தியன் (கி.மு. 267 - 257)**

உத்தியன் அநுராதபுர இராசதானியை அநுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு கி.மு. 267 - கி.மு.257 வரை ஆண்ட மன்னனாவான். உத்தியன் மூத்தசிவனின் பல மகன்களுள் ஒருவனாவான்.

**மகாசிவன்(கி.மு. 257 - 247)**

மகாசிவன் அநுராதபுர இராசதானியை அநுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு கி.மு. 257 முதல் கி.மு. 247 வரை ஆண்ட மன்னனாவான். மகாசிவன் மூத்தசிவனின் பல மகன்களுள் ஒருவனாவான்.

**சூரதீசன்(கி.மு. 247 - 237)**

பண்டுகாபயனின் மகனான சூரதீசன் என்பவன் இலங்கையின் அநுராதபுர இராசதானியை கி.மு. 247 முதல் கி.மு. 237 வரை ஆண்ட மன்னனாவான். சேனன் மற்றும் குத்திகன் என்ற சோழ மன்னர்களால் சூரதீசன் கொல்லப்பட்டான். அதன்பின் இலங்கையை சேனன் மற்றும் குத்திகன் எனும் சோழர்கள் ஆண்டனர். இதுவே அநுராதபுரத்தை முதலாவதாக சோழர்கள் ஆண்ட சந்தர்ப்பமாகும். மீண்டும் பாண்டியர் ஆட்சி கி.மு. 215 தொடங்கியது. சூரதீசனும் மூத்தசிவனின் பல மகன்களுள் ஒருவனாவான்.

**சோழ வம்சம்**

**சேனனும் குத்திகனும் (கி.மு. 237-215)**

இரு குதிரை வணிகர்களான சேனனும் குத்திகனும் கி.மு 237 ஆம் ஆண்டு இலங்கையை சூரதீசன் எனும் பாண்டிய மன்னனிடம் இருந்து கைப்பற்றினர். இவர்கள் கி.மு 237 ஆம் ஆண்டு முதல் கி.மு 215 ஆம் ஆண்டு வரை இருபத்திரண்டு ஆண்டு காலம் இலங்கையை ஆட்சி செய்தனர். இவர்களின் பின் இலங்கையை ஆண்டவன் அசேலன் ஆவான்.

**விஜய வம்சம்**

**அசேலன் (கி.மு. 215-205)**

அசேலன், இலங்கையின் அநுராதபுர இராசதானியை, அநுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு கி.மு. 215 முதல் கி.மு. 205 வரை ஆண்ட மன்னனாவான். அசேலன் மூத்தசிவனின் மகன்களுள் இளையவனான். சேனன் மற்றும் குத்திகன் என்ற சோழர்களைக் கொன்று இலங்கையில் மீண்டும் பரம்பரை ஆட்சியை கி.மு. 215 நிலை நாட்டினான். ஆனால் மீண்டும் கி.மு. 205 அநுராதபுர இராசதானியை சோழ மன்னன் எல்லாளன், அசேலனைக் கொன்று அநுராதபுரத்தில் சோழர் ஆட்சியை மீண்டும் நிலைநாட்டினான்.

**சோழ வம்சம்**

அசேலனைக் கொன்று சோழ மன்னனான எல்லாளன் கி.மு 205 இல் ஆட்சியினைக் கைப்பற்றி 44 ஆண்டுகள் இலங்கையினை ஆட்சி செய்தான். எல்லாளன் நீதியான ஆட்சியாளன் என மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**எல்லாளன் (கி.மு 205-161)**

எல்லாளன் கி.மு. 205 இல் இருந்து கி.மு 161 வரை அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆட்சி செய்த தமிழ் மன்னன். தமிழ் இலக்கியங்கள் திருவாரூரில் இருந்து கொண்டு சோழ நாட்டை ஆண்ட மனு மன்னன் பெயர் கொண்ட அரசன், பசுவின் கன்று தன் மகன் சென்ற தேரின் சக்கரத்தில் அடிபட்டு இறந்து விட்டது என்பதற்காக, தன் மகனைத் தன் தேர்க் காலில் கிடத்திக் கொன்று தாய்ப் பசுவுக்கு நீதி வழங்கிய வரலாற்றைக் குறிப்பிடுகின்றன. இந்த நிகழ்வை எல்லாளன் என்னும் மன்னன் செய்ததாக மகாவம்சம் குறிப்பிடுகிறது. இந்த நிகழ்வு நோக்கில் மனு நீதிச் சோழனையும் எல்லாளனையும் இணைத்துக் காட்டுகிறது. இவர் ஆட்சிக்காலம் நீதியானதாகவும் சிறப்பானதாகவும் அமைந்ததாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது.

மகாவம்சத்தின்படி எல்லாளன் தென்னிந்தியாவில் இருந்து படையெடுத்து வந்த சோழ நாட்டைச் சேர்ந்தவர் என்று மகாவம்சம் கூறுகிறது. ஆனால் எல்லாளன் ஈழவூரின் உத்தரதேசத்தை (தற்போதைய பூநகரி) சேர்ந்தவர் என்று சிலர் கருதுகிறார்கள்.

அதற்கான ஆதாரமாக, உத்தர தேசத்தில் குறுநில மன்னனாக எல்லாளன் முதலில் விளங்கியமையால் தான் வவுனிக்குளத்தை அக்கால வேளையில் கட்டியுள்ளான் என்பர். ஆங்கிலேய நாட்டவரான எச்.பாக்கர் மகாவம்சத்தில் அநுராதபுரத்திற்கு வடக்கே அமைந்த பெபிலாபியை பூநகரியின் தென் னெல்லையிலுள்ள பாலியாறு என அடையாளம் கண்டு இங்குள்ள வவுனிக்குளத்தின் தொடக்கத் தோற்றம் எல்லாளனின் சாதனைகளில் ஒன்றாக இருக்கலாமெனக் கூறியுள்ளார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தையிட்டி...

இடம்பெறவுள்ள நிலையில் குறித்த போராட்டம் ஆரம்பமாகியுள்ளது. இந்த போராட்டமானது இன்றும் தொடர வுள்ளது.

இந்த போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செய லாளரும் பாராளுமன்ற உறுப்பினரு மான செல்வராஜா கஜேந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியு மான கனகரத்தினம் சுகாஷ், கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். (4-7,104)

## 82 கிலோ...

அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பள்ளமடு, மருதமடு குளம் அரு கில் மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரக சிய தகவலின் பிரகாரம் மன்னார் மாவட்ட குற்றதடுப்பு பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்களால் கேரள கஞ்சா 82 கிலோ 840 கிராம் சந்தேகநபர் இருவர் உட்பட KDH வான், 2 மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டது.


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 02/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1618
வெற்றி இலக்கங்கள்
மிதுனம் 7 7 8 5 6 3
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.07.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1193
H 21 51 55 72
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.07.02
சீட்டிழுப்பு இலக்கம் 3405
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
R 07 11 57 76
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 02/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1511
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
D 21 01 23 37 46

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.02
சீட்டிழுப்பு இலக்கம் 472
வெற்றி இலக்கங்கள்
தனுசு 06 16 26 47 தனுசு
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/07/02
சீட்டிழுப்பு இலக்கம் 5163
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
C 5 2 2 6 4 4
தேசிய லொத்தர் சபை


இதில் சந்தேகநபர்கள் இருவரும் பேசாலை மற்றும் புதுக்குடியிருப்பு முல் லைத்தீவு பகுதியை சேர்ந்த 23, 36 வயதுடையவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

கைது செய்யப்பட்ட மேற்படி சந் தேகநபர்களுடன் வழக்கு பொருட்கள் மேலதிக விசாரணையின் பின் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத் தப்படவுள்ளன. (4-7,285)

## யாழ்.-...

வேளைகளில் விமானங்கள் இயக்கப் படும் என்றும் அவர் கூறினார்.

12 பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடிய குறித்த சேவையில் ஒரு வழிக் கட்டணமாக ரூ.22 ஆயிரம் ரூபாயும் இருவழிக்கட்டணமாக ரூ.41500 அற விடப்படும்.

இதில் பயணிக்கும் பயணி ஒருவர் 7 கிலோகிராம்பொதியை கொண்டு செல்ல முடியும் எனவும் தெரிவித்தார். (4-7)

## திடீரென...

அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

திடீரென தீ வீடு முழுவதும் பரவி யுள்ளது.

அதனையடுத்து விரைந்து செயற் பட்ட அயலவர்கள் நகர சபை தீயணைப் புப் பிரிவினர் மற்றும் வவுனியா பொலி ஸாருக்கு தகவல் வழங்கினர். (4-7)

## வரி, ஒதுக்கீட்டு...

பார்க்கப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தை நடைமுறைப் படுத்த எதிர்காலத்தில் அனைத்து ஓய் வூதிய நிதியங்களுக்கும் அழைப்பு விடுக்கப்படும் என இராஜாங்க அமைச் சர் சுட்டிக் காட்டினார்.

அந்த கலந்துரையாடல்களின் பின் னர் மாற்று யோசனைகள் இருந்தால் பரிசீலிக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். (4-7)

## சிவபூமி சிறுவர்...

திய கலாநிதி வை.மனோமோகன் தம் பதிகள் சிறப்பு விருந்தினர்களாகவும், நல்லூர் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் கௌ ரவ விருந்தினராகவும் கலந்து கொள்ள வுள்ளனர்.

நிகழ்வில் சிறப்பு மலர் வெளியீடு, விசேட கௌரவிப்பு மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. (4-7)

## தமிழர்கள்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணம் கந்தரோடையில் மட்டும் 50 ஸ்தூபிகள் கண்டுபிடிக் கப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன. விகாரை தளத்தில் காணப்படும் கல் வெட்டுக்களில், அதனை நாக விகாரை என குறிப்பிடுகிறது.

வடக்கில் எடுக்கப்பட்ட கல்வெட் டுக்களின் மூலம், கடந்த காலங்களில் அங்கு சிங்களக் குடியேற்றங்கள் இருந்ததாகத் தெளிவாகக் கூறப்பட் டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களில் உள்ள பெரும்பாலான பழைய கோயில்கள் பண்டைய பௌத்த தலங் களில் கட்டப்பட்டுள்ளன.

வவுனியா, மட்டக்களப்பு, முல்லைத் தீவு, திருகோணமலை, அம்பாறை உள்ளிட்ட பல பிரதேசங்களில் கோயில் கட்டப்பட்டிருந்தாலும் அது பழைமை யான பௌத்த விகாரையாகும். இது என் கண்ணால் பார்த்த ஒன்று.

குருந்தூர்மலை தொல்லியல் தளத் திற்கு முதல்முறை சென்றபோது, ஒரு கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் கல்வெட்டு அழிக்கப்பட்டது. குருந்தூர்மலை விகாரையின் தண் ணீர் பிரச்சினையை தீர்க்க மூன்றாம் மிஹிந்து மன்னர் வந்ததாக அந்த கல் வெட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் கல்வெட்டில் அந்தப் பகுதி குறுங்காமம் என்று அழைக்கப்பட்ட தாக குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்த கிராமத்தில் ஒரு சிறிய ஏரி உருவாக்கப்பட்டது. கல்வெட்டின் படி ஏரியின் பெயர் குருந்த வாபி. அந்த ஏரி தற்போது தண்ணிமுறிப்பு ஏரி என அழைக்கப்படுகிறது. பின்னர் தமிழ் கிராமங்கள் தோன்றியதன் மூலம் மக்கள் தண்ணிமுறிப்பு ஏரியில் தண் ணீர் எடுத்து விவசாயம் செய்துள்ளனர்.

ஆனால் அவர்கள் பௌத்த புனித தளத்திற்கு உரிமை கோர வரவில்லை. இடிபாடுகள் சேதமடைய வில்லை. சமீபகாலமாகத்தான் உரிமை கோரத் தொடங்கியுள்ளனர். சாதாரண தமிழ் மக்கள் உரிமை கோர வில்லை. தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் அவர்களின் அடியாட்கள். வாக்குகளைப் பெறு வதற்காக நடத்தப்படும் அரசியல் நாட கங்கள் அவை எனத் தெரிவித்தார். (4-7)

களின் சிசுக்கள் இறந்துள்ளன. அத் தோடு தாய் ஒருவரின் கர்ப்பப்பையும் அகற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் மாவட்ட வைத்தியசாலை யின் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் முறையிட்டுள்ளதோடு, மருத்துவர் களின் அக்கறையின்மை மற்றும் உரிய நேரத்தில் உரிய சிகிச்சைகளை வழங்காது விட்டமையே காரணம் என குற்றம் சுமத்தியுள்ளனர்.

மேலும் நான்கு சிசுக்கள் இறந்த தருணங்களிலும் பிரசவத் தாயாரது கர்ப்பப்பை அகற்றப்பட்ட சந்தர்ப்பத்தி லும் ஒரு குறித்த பயிற்சி மகப்பேற்றி யல் வைத்திய நிபுணரே சம்பந்தப்பட் டிருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டு கின்றனர்.

எனவே, இது தொடர்பில் மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளர் தெரி விக்கையில்,

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சம்ப வங்கள் தொடர்பிலான முறைப்பாடு கள் தனக்கு கிடைத்துள்ளதாகவும், எனவே தாம் இது குறித்த ஆரம்ப புலன் விசாரணைகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித் தார். (4-7)

## ஜனாதி...

ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் பெரும்பான்மை யான உறுப்பினர் கள் பொதுஜன பெரமுனவின் தலைவரிடம் கடு மையாக கோரி க்கை விடுத்துள் ளதாக பொதுஜன பெரமுனவின் உள்ளக வட்டா ரங்கள் தெரிவிக் கின்றன.

எவ்வாறாயினும் அந்தத் தேர்த லில் பசில் ராஜ பக்ஷ போட்டி யிட்டால், அவர் தனது அமெரிக் கக் குடியுரி மையை விலக் கிக் கொள்ள வேண்டும் என் பதுடன், பசில் ராஜபக்ஷவும் அந்த விடயத்தை தற்போது பரி சீலித்து வருவ தாகவும் அறிய முடிகிறது. (4-7)

## ஒரே...

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதி களிலும் இருந்து பிரசவத்திற்காக கிளிநொச்சி மாவட்ட வைத் தியசாலைக்குச் சென்ற தாய்மார் களில் கடந்த வாரம் மாத்திரம் பிறப்பின்போது நான்கு தாய்மார்


SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2137 நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.02 தினம் ஞாயிற்றுக்கிழமை
D 10 35 43 46
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை ரூ. 2,999,540/-
DLB www.dlb.lk

சனிதா Shanida
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி 2023.07.02
வெற்றி வாரம்: 4298
வர்ணம்: இளஞ்சிவப்பு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,866,372.00
வெற்றி இலக்கங்கள்
23 26 64 70
ஆங்கில எழுத்து M
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 344
சீட்டிழுப்பு திகதி 2023.07.02
கபிலம்
வெற்றி இலக்கங்கள்
07 19 32
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை ரூ. 2,594,320/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,395,010.60
திகதி 2023-07-02
வெற்றி வாரம் 3849
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 06 08 12 36
விருச்சிகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,987,540/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 08 23 31 36 64
சுப்பர் இலக்கம்
1313
மஞ்சள்
2023.07.02
ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 342,656,748.60
DLB தொலை பேசி 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோட்டிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 1963
வர்ணம்: இளம் பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2023.07.02
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 54,845,691/-
வெற்றி இலக்கங்கள்
09 11 37 49
ஆங்கில எழுத்து F


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/=

(16033)

T.P:077 544 8503



## விற்பனைக்கு

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் 25 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட மாடிக்கடையும் யாழ். ஸ்ரான்லி வீதியில் 20 அடி அகலமும் 200 அடி நீளமும் உடைய மாடிக்கடையும் விற்பனைக்கு உண்டு. (16173)

077 723 2535



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- ஒரு பரப்பின் விலை 150,000/= (ஒன்றரை இலட்சம்) ரூபாய் மட்டும்.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.

(16171)

076 826 0354, 076 057 0354



## தேவை

யாழ். K.K.S காபருக்கு அண்மையில் 10 பரப்பு தொடக்கம் 100 பரப்பு வரையிலான காணி உடன் தேவை. (16172)

077 723 2535


## குளிக்க சென்றவர்கள் சடலமாக மீட்பு

(கொழும்பு)

நுரைச்சோலை இளந்தையடி கடற்கரையில் குளிக்கச் சென்ற இருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட இருவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பாட்டனும், பேரனும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் நுரைச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4,7)


## நாராயண தைலம்

சகலவிதமான நரம்புகள் தொடர்பான நோய்கள், பாரிசவாதம் மற்றும் குருதிச்சுற்றோட்டத்தினை சீர்செய்வதற்கும் கடுமையான நோவுக்கும் பயன்படுத்தலாம்.

நாராயண தைலம் NARAYANA THILAM (C-6859)

MANUFACTURED BY :
SRILANKA AYURVEDIC
DRUGS CORPORATION

சந்தைப்படுத்துவோர் :
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 2567



## சரவணபவன் பென்சி கவுஸ் இன் மாபெரும் ஆடித் தள்ளுபடி

கொழும்பு மொத்த விலையில் 30% விலைக்கழிவுடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

பிளாஸ்ரிக் பொருட்கள், கிறீம் வகைகள், பான்சி வகைகள், பாட்டா வகைகள், சில்வர், மாபிள், அலுமினிய பொருட்கள், சோடனைப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், மணிக்கூட்டு வகைகள், தையல் உபகரணங்கள், அன்பளிப்பு பொருட்கள், மொடன் பட்டின் வகைகள், அழகுசாதனப் பொருட்கள், மாஸ் வகைகள், குடை வகைகள், கவரின் வகைகள், பாடசாலை உபகரணங்கள், பாக் வகைகள் இன்னும் பல பொருட்கள் ஒரே இடத்தில் மலிவாக பெற்றுக் கொள்ளலாம்.

உரிமையாளர் :
தே. கலைத்தாசன் (கரன்)
021 315 5900

26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன்,
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

(16171)


ஓம் சிவாயநம
நாககன்னி அம்பாள் துணை

## சித்தன்கேணி அருள்மிகு ஸ்ரீ நாக கன்னி அம்பாள் ஆலயம்





## பூரணை தீர்த்தமும் தீ மிதிப்பும்

03.07.2023 திங்கட்கிழமை பகல் 12 மணி

**கிரியைகளை நிகழ்த்துபவர்**

தேசமான்ய சாமஸ்ரீ சித்தஞானகுரு இந்திரன் ஐயா
உதவிக்குரு தேவி உபாசகர் சுதா ஐயா

**சைவச்சொற்பொழிவு**

சைவ சின்மயர் க. நித்தியபாபுதரன்
அருட்சொல்வாரி சைவசித்தாந்த கலாநிதி வருணனைக் கலாநிதி
சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் J.P, M.A

**விசேட மேளக்கச்சேரி**

வட்டுக்கோட்டை இராமநாதன் புதல்வர்கள் குழுவினர்
சித்தன்கேணி கண்ணன் குழுவினர்

சித்தஞானகுரு இந்திரன் ஐயாவும்
உபயகாரர்களும் தொண்டர்களும்

(C-6860)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நவக்கிரி பகுதியில் 44 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- நவக்கிரி மாணிக்க பிள்ளையார் கோயில் வீதியில்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- 3 வருடங்கள் பூர்த்தி அடைந்த தென்னைகள் உள்ளன.
- நிலாவரை வற்றாக்கிணற்றில் இருந்து 1km தூரம்
- 1 பரப்பின் விலை 1200000 (பன்னிரண்டு இலட்சம்)


பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி தொடக்கம்
மாலை 6 மணிவரை

(16175)

தொடர்புகளுக்கு: ஜெயம்

077 814 7389, 077 986 5457


## கண்ணீர் அஞ்சலி



ஊரெழு கிழக்கில் பிறந்து உரும்பிராய் மேற்கு அன்னங்கையில் இல்லறம் புகுந்து தற்காலிகமாக ஜேர்மனியில் வசித்த

### பசுபதி புவனேந்திரம்

அவர்கள் காலமான செய்தி அறிந்து நாம் கதிகலங்கி நிற்கிறோம். ஊரெழு நாவலம்பதி ஞான வயிரவர் திருக்கோவிலின் கொடியேற்றத் திருவிழாவின் பங்காளர்களில் ஒருவரும் திருப்பணிக்கு நிதி வழங்கி வந்த அமரரின் மறைவு எமக்கு பேரிழப்பாகும்.

அன்னாருக்கு எமது துயரம் நிறைந்த கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மலர்வு 12.01.1958
உதிர்வு 24.06.2023

பரிபாலன சபை
ஞானவயிரவர் திருக்கோவில்
ஊரெழு கிழக்கு

நாவலம்பதி

(16166)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, ...... வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.